# 'எனது ராஜினாமாவை தமிழரசுக்கட்சி விரும்பவில்லை'

## ஆட்சிமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

''மாவட்டசபை மசோதா கொண்டுவருவதற்கு நான் முயற்சி எடுத்தேன். ஆனால் எதிர்க்கட்சிகளின் தவருன பிரசாரத்தின் காரணமாக இதனைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. இதனால் தமிழரசுக்கட்சிக்கு நான் அளித்த வாக்குறுதியை காப்பாற்ற முடியவில்லை என்பதற்காக நான் அவர்களிடம் எனது பதவியிலிருந்து ராஜினாமா செய்துவிடப்போவதாகத் தெரிவித்தேன். ஆனால் அவர்கள் எனது ராஜினாமாவை விரும்பவில்லை.''

இவ்வாறு சிம்மாசனப்பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை அரசாங்கத் தரப்பில் முடித்துவைத்துப் பேசிய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் குறிப்பிட்டார்.

திரு. டட்லி மேலும் பேசுகையில், சிங்களம் அரசகருமமொழி இதில் தேர்ச்சி பெறுவதற்காக பரீட்சையில் தோற்றுதவர்களுக்கே வேலைநீக்க நோட்டீஸ் வழங்கப்பட்டது என்ருர்.

கோணேசர் ஆலயம் சம்பந்தமாகக் குறிப்பிட்டுப் பேசிய பிரதமர் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட எந்த அலுவல்களிலும் பிறர் தலையிடுவதை தாம் விரும்பவில்லை என்ருர். வடக்கு கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவிககப்பட்ட குற்றச்சாட்டை அவர் மறுத்தார். சம்பள நிர்ணயக்கமிஷன் இடைக்கால அறிக்கை அமுல் நடத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

### தி. மு. க.

தி. மு கவைத் தடை செய்யவேண்டுமானல் இந்நாட்டில் வெளிநாட்டுத் தொடர்புள்ள இரண்டு கட்சிகளையும் தடை செய்ய வேண்டும் என்று கூறிய பிரதமர் டட்லி இவ்விதத் தடை செய்யும் வேலைகள் சர்வாதிகாரத்துக்குத் தான் வழி வகுக்கும் என்ருர்.

சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் பேசுகையில் அடுத்த பொதுத்தேர்தலில், தமது கட்சி பெரும்பான்மைப்பலம் பெற்று வராதுவிட்டாலும்கூட தமிழரசுக்கட்சியுடன் சேரமாட்டாது என்று கூறினர்.

எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமா பேசுகையில், வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க அரசாங்கத்தால் முடியவில்லை என்றும், இ.போ.ச, ரயில்வே லாபகரமாக இயங்கவில்லையென்றும், பாவனையாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதில் கஷ்டம் அனுபவித்துவருகிருர்கள் என்றும் குற்றஞ்சாட்டினர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை இன்று சபையில் நிறைவேற்றப்பட்டது.

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

EELANADU

மலர் 11

இதழ்:165

தேசிய தினசரி

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

யாழ்ப்பாணம் ஆடி 12 ஜ: அவ 11 ஞாயிற்றுக்கிழமை [27-7-69]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



[illegible] கோர்ப்பரேஷன் [illegible] கொழும்பு

# தி. மு. க. பொதுச்செயலாளர் பதவிக்குப் போட்டியில்லை



## கருணாநிதி - நெடுஞ்செழியன் சமரச உடன்பாடு



### கட்சியின்தலைவராக கலைஞர் பதவி ஏற்பார்

சென்னை, ஜூலை 26

**தமிழ்நாடு திராவிடமுன்னேற்க் கழகத்தின் பொதுச்செயலாளர் பதவிக்கு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கும், முன்னாள் அமைச்சர் திரு. நெடுஞ்செழியனுக்குமிடையில் போட்டியிருக்காது.**

**போட்டியைத் தவிர்ப்பதற்கான சமரச உடன்பாடு ஒன்றை இரு தலைவர்களும் செய்து கொண்டிருப்பதால் போட்டி தவிர்ப்பு ஏற்பட்டிருக்கின்றது.**

தி. மு. க. பொதுச் செயலாளர் பதவிக்கு திரு. நெடுஞ்செழியனே போட்டியிடுவார். ஆனல் கருணாநிதி அவரை எதிர்த்துப் போட்டியிடமாட்டார். அதற்குப் பதிலாக திரு. கருணாநிதி கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவார். இதற்கான உடன்பாடொன்றை குழுத்தலைவர்களும் செய்து கொண்டிருக்கிருர்கள். இத்தகவலை தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. [illegible] அறிவித்திருக்கிருர்.

தமிழ்நாடு திராவிட முன் [illegible] னும், திரு. கருணாநிதியும் [illegible] போட்டித் தவிர்ப்பு ஏற் [illegible]

[illegible] தையும் அவர்கள் விரும்பவில்லை. இரு தலைவர்களுக்குமே கட்சியில் செல்வாக்கு இருப்பதே இதற்குக் காரணம். இதன்பேரில் இரு தலைவர்களும் பல தடவைகள் சந்தித்து போட்டி தவிர்ப்புப்பற்றிக் கலந்து பேசினர்கள். ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டனர். கட்சித் தலைமையும் அரசுத் தலைமையும் ஒரே இடத்தில் இருந்தால்தான் அரசாங்கத்தின் கொள்கைகளில் வீண் மோதல்கள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று திரு. கருணாநிதி கருதுகிருர். கட்சித் தலைமையும் அரசுத் தலைமையும் ஒரே இடத்தில் இருக்க வேண்டிய அவசியம் இல்லையென்று திரு. நெடுஞ்செழியன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த நிலைமையில் கட்சியில் முக்கிய பிரமுகர்களான திரு. எம். ஜி. ராமச்சந்திரன், திரு. மதியழகன் போன்ருர் திரு. கருணாநிதி [illegible]ய கழகத் தோழர்கள் ஆதரிக்க வேண்டும் என்று அறிக்கைகள் வெளியிட்டனர். மாவட்ட செயலாளர் [illegible]

### இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலைய 16-வது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று மாலை சம்சாரிகளுக்கும், வாலிபர்களுக்குமிடையேயான கிரிக்கெட் போட்டி ஒன்று நடைபெறவிருக்கின்றது.

### வங்கி தேசியமய

## போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் இன்று யாழ். வருகிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

போஸ்ட் மாஸ்டர் ஜெனரலும், தந்தித் தொடர்புப் பகுதி அதிகாரியுமான திரு. வேர்ணன் அபேசேகரா இன்று காலை உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணம் வருகின்ருர்.

இன்று காலை விமானத்தில் பலாலியில் வந்திறங்கும் இவரை யாழ்ப்பாணம் போஸ்ட்மாஸ்டர், வடபகுதி தபால் தந்திப் பகுதி சுப்ரின்டன் ஆகியோரும் ஊழியர்களும் வரவேற்பார்கள்.

இன்றுமாலை கரவெட்டியில் புதிய தபால் நிலையத்தைத் திறந்து வைப்பதற்கு முன்னர் திரு. வேர்ணன் அபேசேகரா, நெல்லியடிசந்தியிலிருந்து ஊர்வலமாக தபால் நிலையம் வரை அழைத்துச் செல்லப்படுவார். இன்றிரவு கரவெட்டியில் இராப்பே சன விருந்து அளிக்கப்படும்.

29-ம்திகதி யாழ்ப்பாணம் தபால் நிலையத்தின் சகல பகுதிகளையும் பார்வையிட்டு நிலைய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர் அன்று மாலையே கொழும்பு திரும்புவார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

கல்முனையில் நேற்றுமாலை இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 256-வது சீட்டிழுப்பில் பரிசு பெறும் டிக்கட்டுகள் வருமாறு:-

முதலாம் பரிசு

11 D 0828 ரூ. 100,000

2-வது பரிசு

03 J 0604 ரூ. 40,000

3-வது பரிசு

17 U 0956 ரூ. 100,000

தலா ரூபா 880-00 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 05 A 0166 | 03 A 0056 |
| 36 A 0871 | 37 A 0798 |
| 47 A 0192 | 05 B 0210 |
| 09 B 0416 | 34 B 0234 |
| 05 C 0018 | 12 C 0658 |
| 20 C 0502 | 35 D 0572 |
| 37 D 0639 | 41 D 0708 |
| 44 D 0845 | 02 E 0845 |
| 28 E 0041 | 05 F 0758 |
| 26 F 0556 | 27 F 0319 |
| 28 F 0660 | 32 F 0349 |

## கிரிக்கு தி. மு. க. ஆதரவு

சென்னை, ஜூலை 25

இந்திய ஜனதிபதி தேர்தலில் திரு. வி வி. கிரியை ஆதரிப்பதென தி. மு. க. முடிவுசெய்துள்ளது மேலும் நான்கு எதிர்க்கட்சிகளும் திரு. கிரியை ஆதரிப்பதென முடிவுசெய்துள்ளன. தி. மு. க. ஆதரவுபற்றி முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி (கா. நி) வெளியிட்டார்.

## சுவர் இடிந்து விழுந்து சிறுவன் ஸ்தலத்தில் மரணம்

திருக்கோணமலை, சனி

மண்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது வீட்டு மண்சுவர் இடிந்து விழுந்ததால் 6 வயதுச் சிறுவன் பரிதாபமாக மாண்டார். இச்சம்பவம் உப்புவெளி செல்வநாயகபுரக் குடியேற்றத்தில் நடந்தது. கத்திப் பிடி வெட்டி வாருங்கள் எனத் தகப்பனிடம் கூறிவிட்டு அடுத்த வீட்டுக்குச் சென்று [illegible]

## 15 பேர் மட்டுமே போட்டியிடுவர்

புதுடில்லி, ஜூலை 26

இந்திய ஜனதிபதி பதவிக்கு தாக்கலாகியிருந்த 24 வேட்பு மனுக்களில் 9 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது 15 பேர் இப்பதவிக்கு போட்டியிடுகிருர்கள். 24 வேட்பா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி தேசியமய

## மசோதா தாக்கல்

புதுடில்லி, ஜூலை 25

லோகசபையில் இன்று வங்கிகள் தேசியமயமாக்க வகைசெய்யும் மசோதா தாக்கல்செய்யப்பட்டது.

லாக திரு. கருணாநிதி கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிடுவார். இதற் கான உடன்பாடொன்றை குழுத்தலைவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தகவலை தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. நடராஜன் அறிவித்தி ருக்கிறார்.

தமிழ்நாடு திராவிட முன் னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பத விக்கான தேர்தல் நாளை (27ம் திகதி) நடைபெற விருக்கின்றது. இப்பதவிக்கு திரு. இரா. நெடுஞ்செழிய னும், திரு. கருணாநிதியும் போட்டியிடுவதாக அறிவித் திருந்தார்கள். கட்சியின் இரு முக்கிய தலைவர்களுக் கிடையில் மோதல் ஏற்படு வதால் கட்சிக்குள் பிளவு ஏற்படலாம் என்று அஞ்சப் பட்டது. இதன் காரணமாக போட்டித் தவிர்ப்பு ஏற் படுத்துவதற்காக கட்சியின் முக்கிய பிரமுகர்கள் முய ற்சி எடுத்து வந்தார்கள். இரு தலைவர்களுமே போட் டியிலிருந்து விலகிக்கொள்ள விரும்பவில்லை. அதேசமயம் கட்சியில் பிளவு ஏற்படுவ ரன், திரு. மதியழகன் போன்றோர் திரு. கருணாநிதி யையே கழகத் தோழர்கள் ஆதரிக்க வேண்டும் என்று அறிக்கைகள் வெளியிட்ட னர். மாவட்ட செயலாளர் கள் பலரும் இவ்வாறே அறிக்கைகள்வெளியிட்டனர்

போட்டியேற்பட்டு இருவ ரில் ஒருவர் தோல்வியுற்றால் அதனால் கட்சியில பிளவு ஏற்படாவிட்டாலும் மனக் கசப்புகள் அதிகரித்துபெரிய நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்று கருதப்பட்டது.

இந்த நிலைமையில இரு தலைவர்களும் ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். தற்போ துள்ள கழகத்தின் பொதுக குழுத் தலைவர் பதவி கழகத் தலைவர் பதவியென மாற் றப்படும். இப் பதவிக்கு திரு.மு. கருணாநிதிபோட்டி யிடுவார். அதேசமயம் திரு. நெடுஞ்செழியன் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுவார். பொதுக் குழு தலைமைப்பதவிக்குப் போட்டியிடவிருந்த திரு. அன்பழகன் எம். பி. போட் டியிலிருந்து விலகிக் கொண் டுள்ளார். இதன்மூலம் கட் சியில ஏற்படவிருந்தபெரிய நெருக்கடியொன்றை இரு தலைவர்களும் சாதுர்யமாக தவிர்த்திருக்கிறார்கள்.

தி மு. க.வின் பொருளா ளர் பதவிக்குப் போட்டி யிடப் போவதாக எம். ஜி. ஆர். ஏற்கனவே அறிவித் திருக்கின்றார்.

# செவ்வாய்க்கிரகம் பற்றிய தகவல் அடுத்தவாரத்தில் கிடைக்கும்

ஹுஸ்டன், ஜூலை 25

அடுத்த வாரத்தில் செவ்வாய்க்கிரகம் பற்றிய உண்மையான சில தகவல்களை அறிந்துகொள்ளமுடியும் என ஹுஸ்டனிலுள்ள விண்வெளிப் ஆராய்ச்சிடைரக்டர் டாக்டர் ஜோர்ஜ் இன்று அறிவித்தார். அமெரிக்கா 24-ந் திகதி செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பி வைத்த ஆளில்ல இரு விண்வெளிக் கப்பல்களே இத்தகவல்களை பூமிக்கு அனுப்பிவைக் கும்.

பூமியிலிருந்து 2 இலட்சத்து 39ஆயிரம் மைல் தூரத்திலுள்ள சந்திரனைச் சாடி வெற்றி கண்டு திரும்பிய மனிதன் இப்பொழுது இதைவிட முப்பது மடங்கு தொலைவிலுள்ள செவ் வாய்க்கிரகத்தில் காலடி எடுத்து வைப்பதற்கான முயற்சிக்கு இந்தப் புதிய தகவல்கள் உதவுமென நம்பப்படுகின்றது.

# சந்திரனில் விஷக்கிருமிகள் இல்லை பரிசோதனையில் டாக்டர்கள் அறிவிப்பு

## ஆம்ஸ்ரோங்குக்கு சிறிது சுகவீனம்

ஏற்கனவே உள்ள திட்டத்தின்படி அமெரிக்க தேசிய விண்வெளி நிவாரணச் சங்கம் 1970-ல் செவ்வாய்க்கு மனிதனை அனுப்புவதாகவிருந்தது. ஆனால் இப்போதய நிலையில் குறிப்பிட்ட வருடத்துக்கு முன்னரே மனிதன் செவ்வாயில் காலடி எடுத்துவைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் அபிப்பிரா யம் வெளியிட்டுள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்துக்கு 2000 மைல்களுக்கு அண்மையில் செல்லவிருக்கும் இரண்டு விண்வெளிக் கலங்களும் கிரகத்தின் தரைத்தோற்றங்களை டெலிவிஷன் மூலம் படம் பிடித்து பூமிக்கு அனுப்பும். இங்கு உயிரினங்கள் வாழக்கூடுமென்றும் விஞ்ஞானிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

சந்திரனில் காலடி எடுத்து வைத்து அகில உலகத்தின் புகழைத் தட்டிக்கொண்டு நேற்றிரவு பூவுலகம் திரும் பிய சந்திர மனிதன் ஆம்ஸ் ரோங்குக்கு காதில் சிறிது சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டது. பல நாட்கள் விண்வெளிக் கலத்தில் பிரயாணஞ்செய்த தினால் தான் இது ஏற்பட் டுள்ளதாகவும், இச்சுகயீனம் பற்றி அச்சமுறவேண்டிய தில்லையென்றும் இவரைபார் வையிட்ட டாக்டர்கள் தெரி வித்துள்ளனர்.

கடைசியாக கிடைத்த தக வலின்படி அப்பல்லோ-11 விண்வெளி வீரர்களுக்கு சந் திரனிலிருந்து எவ்வித விஷக் கிருமிகளும் தொற்றியிருக்க வில்லை என்று வைத்திய பரி சோதனையில் முடிவாக்கப் பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 14-ம் திகதி சந்திரனுக்கு அனுப் பப்படவிருக்கும் அப்பல்லோ-12விண்வெளிக்கப்பலில் பிர யாணஞ்செய்யும் 3 வாண வெளி வீரர்களில் இருவர் சந்திரத்தரையில் 32 மணித் தியாலங்கள் தங்கியிருந்து பல ஆராய்ச்சிகளை நடத்து வர் என்று இன்று அறிவிக் கப்பட்டது. அப்பல்லோ-12-ல் பிரயாணஞ்செய்யும் கொன்ரேட், வீம் ஆகிய இருவரும் சந்திரனில் மேற் குப் பகுதியில்உள்ள கொந்த ளிப்புக்கடல் என்று அழைக் கப்படும் தரையில் இறங்கு வர். அப்பல்லோ-11 வீரர் கள் கிழக்குப் பகுதியில் உள்ள 'அமைதிக்கடல்' பகு தியில் இறங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது.

# செனட்டர் கென்னடிக்கு இருமாத சிறை

வாஷிங்டன், ஜூலை 25

செனட்டர் எட்வேட் கென்னடிக்கு இன்று இரு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

செனட்டர் கென்னடியின் கார் விபத்தில் சிக்கியபோது இவரது காரில் இருந்த இருபத்தொன்பது வயது நிரம்பிய செல்வி மேரிஜோ என் ப மாரில்ண்டார். இதனை உடனே பொலிசுக் குத் தெரிவிக்காத குற்றத் துக்காக செனட்டர் கென் னடிமீது வழக்குத் தொட ரப்பட்டிருந்தது.

இதனை விசாரணை செய்த மாவட்ட நீதிபதி செனட் டர் கென்னடிக்கு இரு மாதச் சிறை விதித்தாரெனி னும் இவரது நல்ல நடத் தைக் காரணமாக இவருக்கு இத்தண்டனையிலிருந்து விலக்களிப்பதாகத் தெரி வித்தார்.

| | |
|---|---|
| 20 C 0502 | 35 D 0572 |
| 37 D 0639 | 41 D 0708 |
| 44 D 0845 | 02 E 0845 |
| 28 E 0041 | 05 F 0758 |
| 26 F 0556 | 27 F 0319 |
| 28 F 0660 | 32 F 0349 |
| 33 F 0131 | 34 F 0674 |
| 44 F 0018 | 45 F 0541 |
| 07 G 0407 | 15 G 0502 |
| 28 G 0056 | 49 H 0735 |
| 08 J 0300 | 32 J 0372 |
| 42 J 0783 | 49 J 0807 |
| 05 K 0405 | 24 K 0283 |
| 27 K 0523 | 32 K 0128 |
| 35 K 0142 | 38 K 0108 |
| 06 L 0270 | 15 L 0550 |
| 24 L 0446 | 29 L 0768 |
| 40 L 0003 | 47 L 0339 |
| 15 L 0464 | |
| 09 M 0383 | 11 M 0150 |
| 33 M 0481 | 47 M 0657 |
| 08 N 0981 | 08 N 0499 |
| 18 N 0249 | 12 N 0016 |
| 06 O 0453 | 25 O 0014 |
| 27 O 0049 | 41 O 0602 |
| 06 P 0154 | 41 P 0835 |
| 43 P 0414 | 07 Q 0409 |
| 12 Q 0014 | 14 Q 0147 |
| 41 Q 0687 | 41 Q 0166 |
| 42 Q 0537 | 36 R 0238 |
| 04 S 0218 | 15 T 0602 |
| 40 T 0735 | 05 U 0340 |
| 23 U 0547 | 40 U 0222 |
| 26 V 0307 | 16 R 0801 |
| 48 R 0750 | 13 T 0686 |
| 40 T 0617 | 45 T 0143 |
| 09 U 0571 | 28 U 0876 |
| 25 V 0286 | 49 V 0018 |
| 01 \ 0113 | 32 V 0937 |
| 39 X 0519 | 06 Y 0136 |
| 46 Y 0525 | 30 Z 0488 |
| 35 Z 0640 | 37 Z 0493 |
| 18 V 0353 | 24 X 0576 |
| 49 X 0279 | 27 Y 0960 |
| 21 Z 0776 | 31 Z 0871 |
| 37 Z 0735 | |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டியவை )

# 'சம்பள நிர்ணயசபையின் சிபார்சுஏற்றுக்கொள்ளப்படும்'

—சி.பி.டி.

ஹம்பாந்தோட்டை, சனி

உடவளவை திட்டம் பூர்த்தியானதும் 11 கோடி ரூபாய் அன்னிய செலாவணி கிடைக்கக்கூடியதாகவிருக் கும். எனவே உடவளவை திட்டவேலைகளுக்கு முதலி டம் கொடுக்கவேண்டியது எமது கடமையாகும். அர சாங்க ஊழியர்களின் சம் பளத்தை உயர்த்த அரசாங் கம் தீர்மானித்துள்ள இவ் வேளையில் புதிய அபிவிருத் தித் திட்டங்களை அரசாங் கத்தினுல் கொண்டுவரவிய லாது. சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் சிபார்சு களை தேசிய அரசாங்கம் நிறைவேற்றவுள்ளது.

திசமகாரகமாவில் நடை பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய காணி விவசாய அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா மேற்கண்ட வாறு கூறினுர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் முன்னைய அரசாங்கம் விவசாய அபி விருத்திக்கு ஒருவித சேவை யும் ஆற்றவில்லை. ஊழியர் களின் சம்பளத்தை அதிகரிக் காமல் இருந்தால் கிரிண்டி ஓயா திட்டத்தையும் நாம் செயல்படுத்தியிருக்கலாம் எனத்தெரிவித்தார்.

மாக மாண்டார். இச்சம்ப வம் உப்புவெளி செல்வநா யகபுரக் குடியேற்றத்தில் நடந்தது. கத்திப்பிடி வெட்டி வாருங்கள் எனத் தகப்பனிடம் கூறிவிட்டு அடுத்த வீட்டுக்குச் சென்று அங்குள்ள பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த காளியப்பு தர்மலிங்கம் என்ற பாலகனை அவ்வீட் டுக் களிமண் சுவர் இடிந்து விழுந்து ஸ்தலத்திலேயே மாண்டவராவர். இவருடன் விளையாடிக் கொண்டிருந்த மற்றும் சிறுவர்களான எஸ். மகேந்திரன் (6 வயது), எல. ராசன் (வயது 8), கோ. பர மானந்தவேல் (4 வயது) ஆகிய மூவரும் காயங்களு டன் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

சிறுவன் தர்மலிங்கத்தின் மரணத்தை விசாரணை செய்த திருக்கோணமலை மரண விசாரணை அதிகாரி திரு. வி. ஆர். 'சச்சிதானந் தம் திடீர் விபத்தினுல் மூச் சுத் திணறி மரணம் ஏற் பட்டுள்ளதாகத் தீர்ப்பளித் தார்.

நக்ஸல்பாரி அஜிதா.

# சீன சட்டத்தை தந்தையிட கொடுத்தார்

கோழிக்கோடு, ஜூலை 26

தலைச்சேரி,புல்பள்ளி தாக்கு தல்கள் சம்பந்தமான வழக் குகளில் எதிரியான கேரள நக்ஸல்பாரி கம்யூனிஸ்டு குமாரி அஜிதா,அதே வழக் கில் மற்ருெரு எதிரியான தன் தந்தை குன்னிக்கல் நாராயணனிடம், கம்யூ னிஸ்டு சீனுவின் அரசியல் தஸ்தாவேஜுகள் என்றுகரு தப்படும் இரண்டை கைப் பட கொடுத்தார் அஜிதா ஜாமீனில் இருக்கிறார். நாரா யணன் ரிமாண்டில் இருக்கி றார்.

அஜிதா கொடுத்த தஸ்தா வேஜுகளில் ஒன்று கம்யூ னிஸ்டு சீனுவின் புது அரசி யல் சட்டம் ஒன்றும், மற் ருென்று சீனக்கம்யூனிஸ்டுக் கட்சியின் 9-வது தேசிய காங்கிரஸில்சீனத்தற்காப்பு மந்திரி லின் பியோ வெளி யிட்ட அறிக்கை என்றும் நம்பப்படுகிறது. இவ்விரண் டையும் ஜில்லா மாஜிஸ்தி ரேட் கோர்ட்டு மதிலுக்குள் நிருபர்கள் போலீஸ் அதிகா ரிகள் கண்ணெதிரில் அஜிதா தன் கைப்பட தந்தையிடம் கொடுத்தார். நாராயணன் தன் பெண் கொடுத்த வற்றை நிருபர்களிடம் காட்டினுர்.

க்கு தாக்கலாகியிருந்த 24 வேட்பு மனுக்களில் 9 மனுக் கள் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளன. இப்பொழுது 15 பேர் இப்பதவிக்கு போட்டி யிடுகிறார்கள். 24 வேட்பா ளர்களின் சார்பில் 46 மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டிருந்தன. வேட்பு மனுக் கள் வாபஸ்பெற்றுக்கொள் வதற்கு கடைசி நாள் செவ் வாய்க் கிழமையாகும் திரு சஞ்சிவரெட்டியின் சார்பில் தாக்கலாகியிருந்த 9 மனுக்க ளில் மூன்று நிராகரிக்கப்பட் டன. திரு. தேஷ்முக்கின் சார் பில் தாக்கலாகியிருந்த 6 வேட்பு மனுக்களில் ஒன்று நிராகரிக்கப் பட்டது. திரு. வி. வி. கிரியின் சார்பில்தாக்க லாகியிருந்த 6 மனுக்களும் சரியாக விருந்தன.

ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி ராஸ்டிரபதி தேர்தல நடைபெறும்.

# பிரிட்டிஷ் தூதுகோஷ்டி

கொழும்பு, சனி

பிரிட்டிஷ் ஆலோசகர் சேர்ந்து மூவரடங்கிய தூது கோஷ்டி ஒன்று தற்சமயம் கொழும்புக்குவிஜயம்செய்தி ருக்கிறது. இத்தூதுகோஷ்டி யினர் இலங்கையில்10 நாட் கள் வரை தங்கியிருப்பார் கள். தொழிற்துறை நிர் மாணவேலைகள் சம்பந்தமா கஇலங்கையின் தேவைகளை அறிந்து கொள்ளவே இவர் கள் இங்குவந்திருக்கிறார்கள்.

அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், தனியார் துறைத் தொழிலதிபர்கள் ஆகியோரைச்' சந்தித்து பிரிட்டிஷ் ஆலோசகர் சபை அளிக்கவிருக்கும் சேவைகள் பற்றி இவர்கள் எடுத்து விளக்குவார்கள். பிரிட்டிஷ் தொழில்துறைக்கும், ஸ்தல தொழில் நிறுவனங்களுக்கும் மத்தியில் ஒரு கூட்டுறவை ஸ்தாபிப்பது பற்றியும்இவர் கள் பேசுவார்கள்.

# திருநாள்பூர்த்தி

பண்டத்தரிப்பு,சனி

இளவாலை புனிதயாகப்பர் திருநாள் நவ நாட்களுடன் ஆரம்ப மாகி இறுதி நாள் இம்மாதம் 25-ம் திகதி திரு நாட் பூசையுடனும்சொருப சுற்றுப் பிரகாரத்துடனும் முடிவானது. திருநாளுடன் ஒருவார தியானமும் நடை பெற்றது. தியான போதகங் களை வண யேசுதாசன் சுவாமியார் நடாத்தினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பைக்கற் போடக்கூடிய பெண்கள் தேவை. நேரில் வரவும். அலன் டீ கோ, 23/1, செட்டிதெரு, நல்லூர். 1273

கோயிற் குருக்கள் சேவைக்கு முழுத் தகுதிவாய்ந்த பிராமணர் ஒருவர் கொழும்பிலுள்ள ஓர் கோயிலுக்கு தேவை. வசிப்பிடவசதியுண்டு. நேர்முகச் சம்பாஷணையின் போது சம்பளம் நிர்ணயிக்கலாம். மனுதாரை அறிந்த இரு பிரமுகர்களை, அவர்களின் விலாசத்துடன் குறிப்பிட்டு இப் பிரசுர நம்பரைக் காட்டி பத்திராதிபர் மூலம் 10-8-69க்கு முன் மனுச் செய்க. விளம்பர இல. 1267 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1267

### விற்பனைக்கு

காணி

பண்படுத்தப்படாத இரண்டுபோகம் நெல்விளைவிக்கக் கூடிய 20 ஏக்கர் காணி வவுனியா மன்னார் மெயின்ரோட் 13-ம் கட்டையில் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். A. முருகையா, மான்ஸ்கூல் வீதி, உடுவில். 1272

நல்ல நிலைமையில் உள்ள 22 ஸ்ரீ 7586 பெர்குசன் ட்ருக்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: பொ. சண்முகலிங்கம் கோண்டாவில் கிழக்கு. 1274

இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த காற்சட்டைகள் சுவெற்றர்கள், பலதரப்பட்ட பென்சில் கட்டர்கள், கேத்திர கணித, விஞ்ஞான உபகரணங்கள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். இன்றே விஜயம் செய்யுங்கள். வலி

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### கிராமசபை அலுவலகக் கட்டிடம்

மேற்படி வேலைக்கு நாரந்தனைக் கிராமசபைத் தலைவரால் 1969-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி (9-8-69) சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும், பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 8-8-69-ந் திகதி முற்பகல் 12-00 மணிவரை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 20/-ம், கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10/ ம் செலுத்தவேண்டும். பத்திரப் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. மற்றும் விபரங்களைக் கிராம சபை அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

க. நடராசா,
தலைவருக்காக,
கிராமசபை நாரந்தனை.

கிராமசபை அலுவலகம்,
நாரந்தனை-ஊர்காவற்றுறை
24-7-1969. 1678

### தேவை

நாணயமும் நல்ல நம்பிக்கையுமுள்ள பணப்பொறுப்பாளர் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. நேரில் வரவும். குட்வின்ஸ் அட்வெட்டைசிங் அன் சேல்ஸ் ஏஜன்சி, நம். 3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1270

காமம் மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சங்கானை. தொலைபேசி மானிப்பாய் 525. 1269

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தி-யாழ்ப்பாணம்

ஈர் ஆண்டு நிறைவு விழா

28-7-69 திங்கள் மாலை—4.30 மணிக்கு
முற்றவெளி அருகிலுள்ள
வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்

நிகழ்ச்சிகள்: பிரார்த்தனை
மங்கள வாத்தியம்
தேவகான இசை
பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா திருவாக்கு எடுத்து வருபவர் அன்னை C. S. D. மணி மணி ஊட்டி, இந்தியா.
பஜனை
அன்பர்கள் எல்லோரும் அழைக்கப்படுகின்றனர் 1671

வின்ஸர் ஜெமினி கணேசன்

## இன்றைய பலன்

ஆடி மீ 12 ந் திகதி
27 — 7 — 69

**மேஷம்-** இதயத்தில் தென்றல் வீசும். பிறந்தகத்தின் தொடர்புகள் வளரும். மனதில் கிளுகிளுப்பூட்டும் சம்பவங்கள் இடம்பெறும். மூத்தோரின் உதவியுடன் முன்னேற்றத்துக்கும் இடமேற்படும்.

**ரிஷபம்-** சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக விருக்கும். சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல்நலம் பாதிக்கப்படும். பொறுமையே வேண்டும்.

**மிதுனம்-** நீண்ட நாள் எதிர்பார்த்த நல்லதிருப்பம் இன்று ஏற்படமுடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புக்கள் இறுகும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும். சுகபோக நாள்.

**கடகம்-** பணமுடையுடன் பந்துக்களின் நெருக்கடிகளும் ஏற்படும். மனக்கோட்டையில் வெடிப்புத் தோன்றும். தொழில் துறையில் சகாக்களின் தொல்லைகளுக்கு இடமுண்டு. அடக்கம் வேண்டும்.

**சிம்மம்-** பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு. அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கலாம் பிதாவழி மூலம் பொருள்வரவு கிடைக்கும். தருமகைங்கரியங்களில் விருப்பு மேலிடும்.

**கன்னி-** இடமாற்ற யோசனை இன்று உருவாகலாம். சிலருக்கு உத்தியோக உயர்வும் கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டு. தெய்வத்தின் துணையும் சேரும்.

**துலாம்-** வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும். புதியமுயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள். புத்திர வழியால் புதினமும் கிடைக்கும். புதுமையான எண்ணங்களும் உருவாகலாம்.

**விருச்சிகம்-** பணம் பறிபோவதற்கு இடமேற்படலாம். முகமன்பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்க

## கொழும்புத்துறை இ ம. வித்தியாலய இல்லப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் முதல் முதலாக நடந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் கந்தவனம் இல்லம் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. பொன்னுச்சாமி இல்லம் இரண்டாம் இடத்தையும், கனகசபை இல்லமும், சோமசுந்தரம் இல்லமும் மூன்றுவது இடத்தையும் பெற்றன.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

**சாம்பியன்கள்:**

ஆண்கள்- மேற்பிரிவு: ஐ. தேவராசா, மத்திய பிரிவு: என். பாலசுப்தரமணியம், கீழ்ப்பிரிவு: ரி. சவுந்தரராஜா.

பெண்கள்- மேற்பிரிவு: ரி. சந்திராதேவி, மத்திய பிரிவு: பி. புஷ்பராணி, கீழ்ப்பிரிவு: ஆர். தவயோகலட்சுமி.

**100 மீற்றர்:** மேற்பிரிவு: ஐ. தேவராசா, து. பத்மநாதன், என். சிவராஜா. மத்தியபிரிவு: என். பாலசுப்பிரமணியம், என். சிவராசா, கே. பாலசுந்தரம். கீழ்ப்பிரிவு: ரி. சவுந்தரராசா, ரி. ஜெயகுமார், எஸ். இதயரூபன்.

பெண்கள்- மேற்பிரிவு: எஸ். இராசமலர், கே. இராசநாயகி, எஸ். இந்திராணி. மத்தியபிரிவு: பி. புஷ்பராணி, பா தேவமனோகரி, சி. செல்வதி. கீழ்ப்பிரிவு: ஆர் தவயோகலட்சுமி, எஸ். சிவகுமாரி, கே. ஜீவரேகா.

**150 மீற்றர்:** ஆண்கள்- கீழ்ப்பிரிவு: ரி. சவுந்தரராசா, ரி. ஜெயகுமார், கே தேவராசா

பெண்கள்: கே. இறஞ்ஜி, ஆர். தவயோகலட்சுமி, எஸ். சிவகுமாரி.

**200 மீற்றர்:** ஆண்கள்-மேற்பிரிவு: ஐ. தேவராசா, து. பத்மநாதன், எம். சிவகுமார். மத்தியபிரிவு: கே. பாலசுந்தரம், என். பாலசுப்பிரமணியம், எஸ் சிவராஜா.

பெண்கள்: மேற்பிரிவு: ரி. சந்திராதேவி, எஸ். இராசமலர், என் பாலாம்பிகை, மத்திய பிரிவு: பி. புஷ்பராணி, கே. மகேஸ்வரி, பா தேவமனோகரி.

**400 மீற்றர்:** ஆண்கள்: மேற்பிரிவு: எஸ். சோதிலிங்கம், பி. இரவீந்திரன், என். சிவராசா. மத்திய பிரிவு: எம். குணரத்தினம், என். ஸ்ரீகந்தராசா, வி. ஸ்ரீநாதன்.

**800: மீற்றர்:** ஆண்கள்- மேற்பிரிவு: கே. திருஞானசம்பந்தன், ரி. மகேந்திரன், பி. இரவீந்திரன்.

**1500 மீற்றர்** ஆண்கள்: மேற்பிரிவு-கே. திருஞானசம்பந்தன், ரி. மகேந்திரன் ஆர். குணசிங்கம்.

**தடை ஓட்டம்** ஆண்கள் ரி. கிருபாமூர்த்தி, வை. யோகசுந்தரம், எஸ். சோதிலிங்கம்.

**பெண்கள்-** எஸ். யோகவசந்தா, கே. நிர்மலாதேவி, வை. மல்லிகா.

**குண்டெறிதல்** ஆண்கள்: மேற்பிரிவு- ஏ. தங்கராசா, எம். சிவகுமார், வி. அருள்நாதன். மத்திய பிரிவு-எம். குணரட்ணம், எம். வீஜயகுமார், என். சிறிஸ்கந்தராசா.

பெண்கள்: மேற்பிரிவு. கே. இராசேஸ்வரி, கே. சரஸ்வதி, எஸ். யோகமலர், மத்தியபிரிவு-கே-லட்சுமிதேவி, எஸ். கனகேஸ்வரி, எஸ். இந்திராணி.

**நீளம் பாய்தல்:** ஆண்கள் மேற்பிரிவு- ஐ. தேவராசா

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மாவட்ட அரசாங்க இலாகாக்களிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முடிவுகள சில பின்வருமாறு;

### சமமான முடிவு

சிறைச்சாலை விளையாட்டுக் கோஷ்டிக்கும் இராணுவ விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா 1—1 கோல்களைப் போட்டமையால் ஆட்டம் சரிசமனாக முடிவுற்றது. இப் போட்டிக்கு திரு. கபிரியல்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### தபால் கோஷ்டி வெற்றி

தபால் இலாகாக் கோஷ்டிக்கும் இ. போ. ச. கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் தபால்கோஷ்டி 2—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. அலோசியஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். இவ் இரு போட்டிகளும் யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

## ஊர்காவற்றுறை வட்டார தமிழ் மொழித்திறன் போட்டி முடிவுகள்

அனலைதீவு, சனி

### பிரிவு அ

ஊர்காவற்றுறைக் கல்வி வட்டாரத் தமிழ்த்திறன் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் இப்பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் பங்குபற்றின. போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:

உறுப்பெழுத்து: த. கமலகுமாரன்-இறுப்பிட்டி அ. மி. பாடசாலை புங்குடுதீவு, எ. அருந்தவசீலன்-நெடுந்தீவு அ. மி. பாடசாலை, யோ. கெனிஸ் ஜெனிற்ற-ஊர்காவற்றுறை சென். மேரிஸ் பாடசாலை.

உரத்து வாசித்தல்: ச. தருமகுலசிங்கம்-நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, வை. யோகேஸ்வரன்-நாரந்தனை கணேச வித்தியாசாலை இ. சந்திரகிருஷ்ணன்-பருத்தியடைப்பு கதிரேசானந்த வித்தியாசாலை.

பா ஓதல்: கு. சந்திரபாபு-நயினுதீவு நாகபூஷணி வித்தியாசாலை, ந. மகாலிங்கம்-நெடுந்தீவு பாரதி வித்தியாசாலை, ந. இதயராணி-கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயம்.

சிறு நாடகம்: நெடுந்தீவு றோ. க. த. பெண்கள் பாடசாலை, புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை, நயினுதீவு நாகபூஷணி வித்தியாசாலை.

### பிரிவு ஆ

உறுப்பெழுத்து: மேரி ஜெனிவீவ்-நாரந்தனை றோ. க. த. பெண்கள் பாடசாலை வி. சியாமளாதேவி-நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, அ. எஸ்தர்-நாரந்தனை றோ. க. த. பெண்கள் பாடசாலை.

எழுத்துக் கூட்டல்: ச. மேரி தஸ்மேனியா வியன்கா-நாரந்தனை றோ. க. த. பெண்கள் பாடசாலை, பொ. ஸ்ரீ பக்சலா-நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, ச. ஸ்ரீ ரங்கநாதன்-புங்குடுதீவு மேற்கு அ. மி. பாடசாலை.

உரத்து வாசித்தல்: தொ. அ. கொன்ஸ்ரன்ரைன்-எழுவைதீவு றோ. க. த. க பாடசாலை, சி. பரமேஸ்வரி-கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம், ச. சந்திரமோகன்-புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை.

பா ஓதல்: வீ. தருமகுலசிங்கம்-நயினுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை, ச. வடிவேலு-புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, சு. ஜெயந்தினி-புங்குடுதீவு மேற்கு அ. மி. பாடசாலை.

சொற்பொழிவாற்றல்: லீ. கிளாறிஸ் சாந்தினி-ஊர்காவற்றுறை சென். மேரிஸ்

### பிரிவு இ

உறுப்பெழுத்து: க. செல்வநாயகி-அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், ச. மேரி அகிலேஸ்வரி-ஊர்காவற்றுறை சென். மேரிஸ் பாடசாலை, பா. அரியமலர்-ஊர்காவற்றுறை சென். மேரிஸ் பாடசாலை.

எழுத்துக் கூட்டல்: புஷ்பம் தர்மகுலராசா-புங்குடுதீவு மகா வித்தியாலயம், ப. அருணு-நயினுதீவு நாகபூஷணி வித்தியாசாலை, பாலேஸ்வரி ஸ்ரனிஸ்லோஸ்-கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் கல்லூரி.

கட்டுரை: யெசி அல்விறேற்-கரம்பன் சிறியபுஷ்பம் மகளிர் கல்லூரி, சி. திரேசம்மா-நெடுந்தீவு றோ. க. த. பெண்கள் பாடசாலை, அ. இருதயராசா-புங்குடுதீவு றோ. க. த. க. பாடசாலை.

உரத்து வாசித்தல்: ராஜினி சேவியர்-கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் கல்லூரி, இ. ரோஸ்மேரி அன்ரனிசாந்தி-ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பாடசாலை, ந. இலங்கேஸ்வரி-நயினுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை.

பா ஓதல்: சு. சிவபாலன்-புங்குடுதீவு மகா வித்தியாலயம், வீ. ரவிலோசனன்-கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம், கோ. சிவானந்தன்-புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

சொற்பொழிவாற்றல்: ந. கதிர்வேல்-நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, த. விநாயகமூர்த்தி-புங்குடுதீவு மகாவித்தியாலயம், இ. சகலகலாவல்லி ஊர்காவற்றுறை சென் மேரிஸ் பாடசாலை.

சிறு நாடகம்: நெடுந்தீவு றோ. க. த. ஆண்கள் பாடசாலை, புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை, நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை.

யாழ்ப்பாணத்தில் நடைபெறிருக்கும் தமிழ்மொழி திறன் மாவட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக, போட்டியாளர் தொடர்ந்தும் பயிற்சிசெய்துகொண்டிருக்கும்படிகேட்டுக்கொள்ளப்படுகின்றனரென வட்டாரக் கல்வியதிகாரி திரு. அ சி. நல்லையர் தெரிவித்துள்ளார்.

## முதலிடம்

உடுவில், ஞாயிறு

கல்விநூற்றாண்டு விழாவையொட்டி உடுவில் வட்டார வித்தியாதிபதியால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கிலப்பேச்சு எழுத்து உச்சரிப்பு போட்டிகளில் ''பி'' பிரிவில் மானிப்

## இன்று ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொக்குவில் சனசமூக நிலையத்தினர், நிலையத்தின் 20 ஆண்டு நிறைவுவிழாவையும், திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவையும் இன்று மாலை நிலைய முன்றலில் கொண்டாடவிருக்கின்றனர் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்புச்சொற்பொழிவுகளும், மெல்லிசை மற்றும் கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

## பொடிமெனிக்கா தினமும் தாமதம்

யட்டிநுவர, சனி

கோட்டையிலிருந்து நானுஓயாவுக்குச் செல்லும் 'பொடிமெனிக்கா' ரயில் தினமும் தாமதமாகவே வந்து சேருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று கண்டியிலிருந்து காலை 9-38 மணிக்குப் புறப்பட வேண்டியது 10-00 மணிக்கே அங்கிருந்து புறப்பட்டது. இதே போன்று இப்புகையிரதம் குறிப்பிட்ட நேரத்துக்கு தான் அடைய வேண்டிய நிலையங்களுசகுச் செல்வதில்லை எனப்புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெயர் பலகைகள் வெள்ளை நிறத்தில்

கோட்டை, சனி

வீதிகள் யாவற்றினதும் பெயர் பலகைகள் வெள்ளை வர்ணம் தீட்டப்பட்டவைகளாகவிருக்க வேண்டும் என பொது வேலைப்பகுதி அமைச்சர் திரு. மொன்டேகு ஜயவிக்கிரம உத்தரவிட்டுள்ளார்.

## பிரதமர் வெளியிடுவார்

யாழ்ப்பாணம். ஞாயிறு

கல்வி தொல் பொருட்கலை நூற்றாண்டின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் விசேட முத்திரைகளைக் கொண்ட முதல் நாள் உறைகள் ரத்துச் செய்யப்படும் வைபவம் அடுத்த 1-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. கொழும்பு பிரதம அஞ்சல் அலுவலகத்தில் பிரதம மந்திரி டட்லி சேனநாயகாவால் அன்று காலை 8 மணிக்கு இது வெளியிடப்படும்.

(கா. நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விரும்புவோர் அன்னை C. S. D. மணி மனை
ஊட்டி, இந்தியா.

பஜனை
அன்பர்கள் எல்லோரும் அழைக்கப்படுகின்றனர் 1671



வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்
சரோஜாதேவி
நடித்த
# தாமரை நெஞ்சம்



ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயலக்ஷ்மி
நடித்த
# அன்பு வழி



கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | விஜயா (மட்டுநகர்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | ராஜ் (நீர்கொழும்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி,
சோ, மனோரமா, கண்ணன்
நடித்த
# கணவன்

இசை: எம். எஸ் விஸ்வநாதன்
டைரக்ஷன்: ப. நீலகண்டன்


யான எண்ணங்களும் உருவாகலாம்.

**விருச்சிகம்-** பணம் பறிபோவதற்கு இடமேற்படலாம். முகமன்பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும். அதிக சிந்தனைக்கு இடமளியாது இருக்கவும். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

**தனுசு-** புயல் மோதும் மனதுடன் புறப்படுவீர் இன்று. சிறிய விடயத்துக்கும் அதிக கோபம் ஏற்படலாம். திடீர்முடிவுகள் விபரீத விளைவுகளை ஏற்படுத்தும். அதிகம் அடக்கம் விரும்பத்தக்கது.

**மகரம்-** திடீர் வரவுகளுக்கு இடமுண்டு. வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும். பேச்சு வன்மையின்மூலம் பெரிய இடத்து ஆதரவைத் தேடிக்கொள்ளுவீர்கள். குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் உண்டு.

**கும்பம்-** வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அவசரப் போக்கினுல் ஆபத்துக்கள் விளையும்: சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும். சகோதரவழியாலும் சஞ்சலமுண்டு.

**மீனம்-** அறிவுத்தாகம் மேலோங்கி நிற்கும். ஆராய்ச்சிகளில் ஈடுபட விரும்புவீர்கள். விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும், எதிர்பார்த்த பணம் கைக்குக்கிடைக்கலாம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை
க. வேலுப்பிள்ளை

யஸ்தராகக் கடமையாற்றினுர். இவ் இரு போட்டிகளும் யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

## மாட்டுவண்டி சவாரி போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொன்னுலை நெல்லியான் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் பின்வருமாறு:

'ஏ' பிரிவு: பொ. சங்கரப்பிள்ளை, மயிலிட்டி; சி. சோமசுந்தரம், பொன்னுலை; இ. பெரியதம்பி, சுன்னுகம்.

'பி' பிரிவு: சி. பொன்னம்பலம், மூளாய்; ஆ. நாகலிங்கம், மூளாய்; க. சின்னத்தம்பி, சுதுமலை.

இப் போட்டிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் என். ரி. சம்பந்தன் தலைமை வகித்தார். (தே. நி)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் மரதன் ஓட்டம் நீர்வேலியில் வட்டார வித்தியாசாலைகளின் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நடந்த கூட்டத்தில் திரு. க. வை. தனேஸ்வரனும், திரு. பே. தம்பையாவும் கல்வி நூற்ருண்டு விழா பற்றிப் பேசினுர்கள். கல்வி அமைச்சரின் ஆசிச்செய்தியும் வாசிக்கப்பட்டது.

சரஸ்வதி, எஸ். யோகமலர், மத்தியபிரிவு- கே. லட்சுமிதேவி, எஸ். கனகேஸ்வரி, எஸ். இந்திராணி.

**நீளம் பாய்தல்:** ஆண்கள் மேற்பிரிவு- ஐ. தேவராசாது. பத்மநாதன், எஸ். சட்டநாதர். மத்தியபிரிவு- எஸ். பாலசுப்பிரமணியம், எம். விசயகுமார், எம், குணரட்ணம். கீழ்ப்பிரிவு- ஐ. திருச்செல்வம், ஆ. கேசவநாதன் எஸ். இதயரூபன்.

**பெண்கள்:** மேற்பிரிவு- ரி. சந்திரதேவி, எஸ், இராசமல , என். பாலாம்பிகை மத்தியபிரிவு- பி. புஷ்பராணி கே. மகேஸ்வரி, ஏ. சுலோசன. கீழ்ப்பிரிவு- ஆர். தவயோகலட்சுமி, எஸ். சந்திராதேவி, எஸ். சிவகுமாரி

**தத்தி மிதித்துப் பாய்தல்:** ஆண்கள்: மேற்பிரிவு- எஸ். சோதிலிங்கம், கே. திருஞானசம்பந்தர், கே. செல்வராசா.

**கயிறு அடித்தல்:** பெண்கள்- மேற்பிரிவு- ரி. சந்திராதேவி என். பாலாம்பிகை, கே இராசநாயகி மத்தியபிரிவு எஸ். தர்மராணி, கே. சரோஜினிதேவி. எஸ் அம்பிகா

**சமநிலைஓட்டம்:** பெண்கள் மேற்பிரிவு- எஸ். யோகமலர், எம். இந்திராணி, கே. தயாநிதி.

மத்தியபிரிவு- எஸ். விசயகுமாரி, ஏ. நாகேஸ்வரி, எஸ் றதிதேவி. கீழ்ப்பிரிவு- ஆர். தெய்வரஞ்சினி, ஆர். மஞ்சுளா, பி. செல்வராணி.

தே. நி)

## சீர்கேடு

கோப்பாய், சனி

இப்பகுதியில் கடந்த பல காலமாக தந்திசேவையில் சீர்கேடு நிலவி வருவதாக புகார் செய்கின்றனர். இது குறித்து பொதுமக்கள் பலர் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்குபுகார் செய்தும் பலனெதுவுமில்லையாம். அவசரத்தந்திகள்பல மறுநாளே பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இதற்கு காரணம் கோப்பாய் தபால் நிலையத்தில்தந்தி ஊழியர்பற்ருக்குறையேயென சொல்லப்படுகிறது.

## நியமனம்

கோப்பாய், சனி

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த 10 வருடங்களாக நூல்நிலையப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய திரு. என். வி. துரைரத்தினம் பதவியிலிருந்து ஒய்வுபெற்றுள்ளார். அவரது இடத்துக்குக் கல்விக் கந்தோரிலிருந்து திரு. எஸ். குணசிங்கம் நியமனம் பெற்றுள்ளார்.

-புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, சு. ஜெயந்தினி -புங்குடுதீவு மேற்கு அ. மி. பாடசாலை.

**சொற்பொழிவாற்றல்:** லீ. கிளாறிஸ் சாந்தினி-ஊர்காவற்றுறை-சென். மேரிஸ் பாடசாலை, சு. ஞயாபரராசா-அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம், க. உமா ஸ்ரீ-நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை.

**சிறு நாடகம்:** நயினுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை, நெடுந்தீவு றோ. க. த. பெண்கள் பாடசாலை,

யொட்டி உடுவில் வட்டார வித்தியாதிபதியால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலப்பேச்சு எழுத்து உச்சரிப்பு போட்டிகளில் "பி" பிரிவில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை அதிகமான இடங்களைப்பெற்றது. சுமார் முப்பதுதராதரப் பத்திரங்களுக்கான போட்டிகளில் மேற்படி பாடசாலை மாணவர்கள் இருபது தராதரப்பத்திரங்களை பெற்றுள்ளதுடன் பதின்மூன்று முதலிடதராதபத்திரங்களையும் பெற்றிருக்கின்றனர்

பிரதம அஞ்சல் அலுவலகத்தில் பிரதம மந்திரி டட்லி சேனநாயகாவால் அன்று காலை 8 மணிக்கு இது வெளியிடப்படும்.

(கா. நி)

## காணவில்லை

பண்டத்தரிப்பு, சனி

இளவாலை சென் ஜேம்ஸ் பிரிவைச் சேர்ந்த சவரி அலெஸ்[60] என்பவர் கடந்த இரு வாரமாக காணுமல் போய் விட்டதாக பொலிஸில் அறிவிக்கப் பட்டுள்ளது. இவர் சிறிது புத்தி சுவாதீனமற்றவர்.





# அசுன்டோல்
## அவை அனைத்தையும் அழித்து விடுகின்றது

* கால்நடைகளின் வெளிப்புறத்தைப் பாதிப்பனவற்றைக் கட்டுப்படுத்த மிகத் திறமையான—சிக்கனமான முறை
* எல்லா விலங்கினங்களுக்குமென பாதுகாப்பான வெளிப்பூச்சு மருந்து
* நச்சு ஈக்களைக் கட்டுப்படுத்தவென விசேஷமாக சிபார்சு செய்யப்பட்டது
* டிடிரி, பிஎச்சி, டொக்ஸாபேன், ஆர்சனிக் ஆகியவற்றுக்கு கட்டுபபடாத உண்ணிகள் அழிக்கலாம்
* உலகத்தின் பல பாகங்களிலும் பரிசோதித்து நிரூபிக்கப்பட்டது

ஹேலிஸ் லிமிடட்
எல்லாப் பிரபல மருந்துக் கடைகளிலும் மற்றும் பின்வருமிடத்திலும் அசுன்டொல் கிடைக்கும்:-
மருந்தகப்பகுதி

* கால் நடைகளைப் பற்றியுள்ள நச்சு ஈக்கள், பூச்சி வகைகள் முதலியன



* கோழிகளைப் பற்றியுள்ள நச்சு ஈக்கள், தெள்ளுப் பூச்சி முதலியன



* ஆடுகளிலும் செம்மறியாடுகளிலும் பற்றியுள்ள நச்சு ஈக்கள், தெள்ளுப்பூச்சிகள்



* பன்றிகளைப் பற்றியுள்ள தெள்ளுப்பூச்சி முதலியன



* நாய்களையும் பூனைகளையும் பறறியுள்ள நச்சு ஈக்கள், தெள்ளுப்பூச்சி முதலியன



BAYER
# ஹேலீஸ் லிமிட்ட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10.
தபால் பெட்டி 70, தொலைபேசி: 96333
HAYLEYS
VISION 1049



ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
குழந்தைக்காக



வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
காதல் பறவை



REGAL JAFFNA
Daily 4 Shows
Osmar Sharif &
Francoise Dorleac
in
GENGHIS KHAN
Panavision/Technicolor)



வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ஏ. வி. எம் ராஜன்-பாரதி
நடித்த
பூவும் பொட்டும்



MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
James Coburn
in
WATER HOLE No. 3
(color)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவிமாருடன் டெலிபோனில் பேசினுர்கள்

# அப்பல்லோ-11 வீரர்கள் மூவரும்

## சுரங்க அறையில் சந்திர மண் பரிசோதனை

ஹூஸ்டன், ஜூலை 26

அப்பல்லோ-11 வீரர்கள் மூவரும் நேற்று தமதுமனைவிமாரோடு டெலிபோனில் பேசினுர்கள். மீட்புக்கப்பலான 'ஹார்னட்'டில் தங்கியிருக்கும் ஆம்ஸ்ரோங், ஆல்ட்ரின், கொல்லின்ஸ் ஆகிய அம்மூன்று விண்வெளிவீரர்களும் நேற்று கப்பலில் இருந்தபடியே 'வயர்லஸ்' மூலம் தம்மனைவிமாருடன் டெலிபோன்பேசி மகிழ்ந்தார்கள்.

மீட்புக்கப்பலில் தனி அறையில் ஓய்வுஎடுத்துக் கொள்ளும் விண்வெளி வீரர்கள் மூவரையும் நேற்று பரிசோதித்த விஞ்ஞான டாக்டர் அவர்கள் நல்ல உடல்நிலையிலிருப்பதாகவும் சந்திரனிலிருந்து அவர்கள் தொற்றுநோய்க்கிருமிகள் எதையும் கொண்டுவந்திருப்பதாகத் தெரியவில்லையென்றும் அறிவித்திருக்கிறர். முன்னர் விண்வெளிக்குச் சென்று திரும்பியவர்களைவிட இவர்களின் உடல்நிலை மிகவும் நேர்த்தியாகவிருப்பதாக டாக்டர்கள் கூறியிருக்கிறர்கள்.

விண்வெளிவீரர்கள் மூவரும் மீட்புக்கப்பலில் ஹாவாக்குப்போய் அங்கிருந்து ஹூஸ்டன் செல்வார்கள் அங்கும் சோதனைகளுக்குள்ளாவர்கள். ஆகஸ்ட் 12-ம் திகதிவரை 'குவாரன்டைம்' முகாமில்இருந்துவிட்டு 13ம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸில் அதிபர் நிக்ஸன் அளிக்கும் விருந்தில் பங்குபற்றுவார்கள்.

விண்வெளியிலிருந்து அப்பல்லோ-11 வீரர்கள் கொண்டுவந்த மண்மாதிரிகளில் ஒருபகுதி டெக்ஸாஸ் வந்திருக்கின்றது. பிறகுஅது ஹூஸ்டனுக்கு எடுத்துச் செல்லப்படும்.

### சுரங்க அறையில்

மண்மாதிரிகளைஹூஸ்டனில் காற்றில்லாத சுரங்க அறையொன்றில் வைத்து விஞ்ஞானிகள் திறந்துபரிசோதிக்கவிருக்கிறர்கள். மண்மாதிரிகள் பரிசோதிக்கப்படும்போது தினமும் அதுபற்றிய விபரங்கள் அறிக்கைகளாக வெளியிடப்படவிருக்கின்றன.

சந்திரனில் அப்பல்லோ-11 வீரர்கள் ஆம்ஸ்ரோங்கும்ஆல்ட்டிரினும் எடுத்த படங்கள் அடுத்த திங்கட்கிழமை முதல் வெளியிடப்படவிருக்கின்றன.

### ஒலிம்பிக் கழகம் அழைப்பு

மியூனிச்சில் நடைபெறவிருக்கும் அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுகளின் போது சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும்படி அப்பல்லோ-11 வீரர்கள் மூவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆம்ஸ்ரோங்கிற்கு நேற்று இடது காதில் ஏதோ சிறு நோய் ஏற்பட்டிருந்தது. கண்டுபிடிக்கப்பட்டது. இது பூமிக்குத்திரும்பும்போது ஏற்பட்டிருக்கலாம் என்றும் அதுபற்றி கவலைகொள்ளத் தேவையில்லையென்றும் டாக்டர்கள் கூறினுர்கள்.

## 'அம்புலிப்பயணத்துக்கும் விழாவுக்கும் தொடர்புண்டு'

### இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இலங்கையில் நாம் கல்வி நூற்றுண்டைக் கொண்டாடுவதற்கும், மனித வர்க்கம் சந்திர மண்டலத்தில் புகுந்து புதிய சகாப்தத்தில் பிரவேசித்துக் கொண்டிருப்பதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது."

கல்வி நூற்றுண்டை முன்னிட்டு கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசிய வித்தியாலய அதிபர் திரு. ஐ. ஆ. இராமசுவாமி இவ்வாறு தெரிவித்தார்.

மங்கள வாத்தியங்கள் முழங்க, தேசியக் கொடியை ஏற்றி வைத்து இவர் உரை நிகழ்த்துகையில் விண்வெளி வீரர்கள் வெற்றி கொண்ட மண்ணை ஆராயப்போகும் விஞ்ஞானிகள் குழு வொன்றுக்கு தலைமை வகிக்க விருக்கும் திரு. பொன்னம்பெருமா இலங்கையில் இந்த நூற்றுண்டில் பிறந்து, கல்வி பயின்றவராதலால், கல்வி நூற்றுண்டை நாம் இப்போதுகொண்டாடுவதுமிகப் பொருத்தமானது என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

கடவுள் நம்பிக்கை உள்ளவர்களும், கடவுள்நம்பிக்கை இல்லாதவர்களும் மேற்கொண்ட சந்திரப் பயணத்தில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை வெற்றியீட்டியுள்ளனர். கடவுளை மதியாத பிரம விட்டிணுக்களும் இம் முயற்சியில் தோல்வி தான் அடைந்தார்கள். கடந்த கல்வி நூற்றுண்டில் நாம் பெற்ற கல்வியின் பயன் இலங்கைத்தாயின் மதிப்பை உயர்த்தி வருங்காலச் சந்ததியை கடவுள் பக்திதேச பக்திக்குள்ளாக்கும்.

மேற்படி வித்தியாலய மாணவர்கள் கல்லூரி வாசலிலிருந்து திருநெல்வேலிச் சந்திவரை கல்வி அமைச்சரின் ஆசிச் செய்தி, தேசியக் கொடி ஆகியவற்றை ஏந்திய வண்ணம் மரதன் ஓட்டம் ஓடி விழாவை ஆரம்பித்து வைத்தனர் மாணவர்களின் வேலை அனுபவம், தேகாப்பியாசம், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(கா. நி)

## தமிழ்த்தின விழா

புத்தளம் சனி

புத்தளம் வட்டார பாடசாலைகளின் தமிழ்த்தின விழா 17-7-69-ல் பாத்திமா மகளிர் மகாவித்தியாலயத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி ஜனுப் எம். ஏ. மஜீத் தலைமையில் கொண்டாடப்பட்டது. இப்பகுதியில் உள்ள முப்பத்திரண்டுபாடசாலைகள் சகல போட்டிகளிலும் பங்குகொண்டன பாஓதல், பேச்சு, உரத்துவாசிப்பு, உறுப்பெழுத்து, சொல்வதெழுதுதல் கட்டுரை எழுதுதல் முதலியன வற்றில் அ. ஆ. இ. பிரிவு எனவகுத்துப் போட்டிகள் இடம்பெற்றன, மகாவித்தியாலயங்கள், பட்டணத்தில் உள்ள பாடசாலைக்கும்

ஈடாகநின்றுசிலகிராமப்புரப் பாடசாலைகள் வெற்றிகள் பல ஈட்டியுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றியடைந்தோர், இம்மாதம் 23-ம் திகதி சிலாபம் ஞேமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலையில் சிலாபவட்டார மாணவருடன் போட்டியிட்டனர். அங்கு போட்டியில் வெற்றிபெற்றவர்கள்யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அகில இலங்கைப் போட்டியில் கலந்து கொள்வர்,

## செக்குக்கு அரைலட்சம் ரூபாய் நமது செருப்புகள்

கோட்டை, சனி

இலங்கை தோல் பொருட் கூட்டுஸ்தாபனம் அரைலட்சம் ரூபாய் பெறுமதியான செருப்புகளை செக்கோஸ்லாவாக்கியாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

செக்கோஸ் லாவாக்கியா முதல்தரமான 'இலங்கை செருப்புகளை கேட்டுள்ளது என கூட்டுஸ்தாபன அதிபர் திரு. லையனஸ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதையொட்டி மட்டக்குளியாவில் கூட்டுஸ்தாபனக் காரியாலயத்தில் நடைபெற்ற வைபவத்தில் கூட்டுஸ்தாபனத் தலைவர் இலங்கையிலுள்ள செக்கோஸ்லாவாக்கிய தூதுவர் திரு. ஜெ. கிருவ்ரரிடம்ஏற்றுமதிச் சரக்கை ஒப்படைத்தார். சரக்கைப்பெற்றுக்கொண்ட திரு. கிருவ்டர் இலங்கையோடு தனது நாடு எதிர்காலத்தில் நெருங்கிய வர்த்தக தொடர்பு கொள்ளும் எனத்தான் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

### ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காரைநகர் அரசடிக்காடு கதிர்காம சுவாமி கோவில் வருடாந்த ரதோற்சவம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 1 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

### ஆண்டுவிழா

யாழ்ப்பாணம். ஞாயிறு

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி ஈர்ராண்டு நிறைவு விழா நாளை நடைபெறவிருக்கின்றது. அன்று காலைநிகழ்ச்சிகள் செல்வச் சந்நிதிகோவில் முன்றலில் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். மங்களவாத்தியம், தேவகானம், பகவான் பஜனை ஆகியன நடைபெறும்.

### குருபூர்ணிமா தினம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உருத்திரபுரம் ஜெயந்தி நகர் மகாதேவ ஆச்சிரமத்தில் குருபூர்ணிமா தினம் நாளைநடைபெற விருக்கின்றது.

நடேசர் அபிஷேகம் வியாஸபூஜை, பாதபூஜை, லலிதா அர்ச்சனை ஆகியனவும் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### கண் காட்சி

பதுளை சனி

பதுளையில் தமிழ் சியவச கண்காட்சியில் ஒன்பது பாடசாலைகள் பங்குபற்றின. இக்கண்காட்சி பதுளை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

## "சீனுதான் உலகில் ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்டுள்ள ஒரேநாடு

### வியட்னும் போன்ற தகராறில் இனி அமெரிக்கா மாட்டிக்கொள்ளாதாம்"

### அதிபர் நிக்ஸன் வெளியிடும் கருத்து

கோவான், ஜூலை 26

அமெரிக்கா மீண்டும் வியட்னும் போன்ற பிரச்னைகளில் மாட்டிக் கொள்ளாது என்று அதிபர் நிக்ஸன் இங்கு கூறினுர்.

## 'தானங்களுட் சிறந்தது இரத்ததானம்'

பருத்தித்துறை, சனி

"பல திறமை வாய்ந்த டாக்டர்கள் ஒரு நோயாளிக்கு இரத்தம் கொடுக்க முடியாவிடின் அவனது உயிரைக் காப்பாற்ற முடியாது. குருநாகல்போன்ற பகுதிகளில் இரத்த வங்கியில் இரத்தம் இல்லையென்றுஅறிவித்தல்கொடுத்ததும்பொது மக்கள் உடனடியாகச் சென்றுஇரத்ததானம் வழங் மக்களுக்குஅன்னதானம் வழங்குவதிலும் பார்க்க ஆயிரம் தடவை கோவிலை வலம் வருவதிலும் பார்க்க இரத்த தானம் வழங்கி உயிர்களை மரணத்தினின்றும் பாதுகாப்பது பன்மடங்கு சிறந்த புண்ணியமாகும்." இவ்வாறு வடமாநில இரத்த வங்கி அதிகாரி திரு. ஏ. ஜீவரத்தினம் பருத்தித்துறை வர்த்தகக் கல்லூரி மண்டபத்தில்

## இளம்பெண் மரணம் எதிரொலி

# எட்வர்ட் கென்னடி

# பதவிதுறக்க யோசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்வாட் கென்னடி பதவிதுறக்க யோசனை

வாஷிங்டன், ஜூலை 26 செனட்டர் பதவியைத் தாம் தொடர்ந்து வகிப்பதா அல்லது விலகிவிடுவதா என்பதுபற்றி செனட்டர் எட்வார்ட் கென்னடி ஆலோசித்து வருகிறார்.

நேற்று நாட்டுமக்களுக்கு அவர் டெலிவிஷனில் விடுத்த ஒரு செய்தியில் தமது தொகுதி மக்களுக்கும், தம் நாட்டுககும் இன்னமும் சேவை செய்ய வேண்டும் என்று விரும்புவதாகவும் ஆனல் தாம் தொடர்ந்து பதவி வகிப்பதா இல்லையா என்பது பற்றித் தமது தொகுதியான மாசஸ்சுசெட்ஸ் மக்களின் கருத்தை அறிய விரும்புவதாகவும் கூறினர்.

அண்மையில் கார விபத்தொன்றின்போது செனட்டர் கென்னடியின் காரியதரிசியான 28 வயது மேரி ஜோ கோபெகன் என்ற இளம்பெண் மரணமான போது அந்த இடத்தில் இருக்காமல் போய்விட்டது சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் செனட்டர் கென்னடி நேற்று தம் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதன் பேரில் அவருக்கு இரண்டு மாதசிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அவரது நன்னடத்தைக் காரணமாக தண்டனையை அனுபவிப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்தப் பெண்ணுடன், தமக்கு எதுவித ஒழுக்கம் தவறிய தொடர்பும்கொண்டிருக்கவில்லையென்றும் சம்பவம் நடந்தபோது தாம் குடித்திருக்கவில்லையென்றும் அவர் மறுத்துள்ளார்.

ஒரு விருந்துக்குச் சென்று திரும்புகையில் மரப் பாலம் ஒன்றைக் கடக்கையில் செனட்டர் கென்னடியின் கார் விபத்துக்குள்ளாகிய போது காரிலிருந்த அவரது காரியதரிசி செல்வி கோப்பகன் ஏரியொன்றில்வீழ்ந்து மூழ்கி மரணமானர்.

இந்தப் பெண்ணைக் காப்பாற்றுவதற்கு தாம் பல தடவைகள் ஏரியில் முக்குளித்துப் பார்த்ததாக செனட்டர் கென்னடி பொலிசாரிடம் கூறியிருக்கிறர்.

செல்வி கோப்பகனின் மரணச்சடங்குகளில் செனட்டர் கென்னடி கலந்து கொண்டார். அவருடைய மனைவியும் காலஞ்சென்ற ரொபர்ட் கென்னடியின் மனைவியும் அவருடன் சேர்ந்து கொண்டனர்.

செனட்டர் கென்னடி இந்த விபத்தைப்பற்றி பின்வருமாறு தெரிவித்ததாகப் பொலிசார் கூறினர்கள்.

சப்பாக்குடித் தீவுக்குச் சென்று பிரதான வழியாக நா காரைஓட்டிக்கொண்டு வந்தேன். இந்தப் பகுதி ரோடுகளில் எனக்கு அதிக பரிச்சியமில்லை. ஒரு மலையின்மீது ஏறி கீழிறங்குகையில் குறுகிய பாலம் ஒன்றை அடைந்தபோது பாலத்தின் ஒரு கரையில்கார்ரோட்டை விட்டு இறங்கியது. அப்பொழுது எனது காரில் மிஸ் கோப்பகன் இருந்தார். கார் மல்லாக்காக ஏரியில் மூழ்கியது. காரின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறப்பதற்கு எத்தனித்தேன். பின்பு எப்படி வெளியில் வந்தேன் என்பது ஞாபகமில்லை. நான் மீண்டும் பல தடவைகள் முக்குளித்து கார் இருந்த இடத்துக்குப் போய் அவர் இன்னும் காருக்குள் இருக்கிறாரா என்று பார்த்தேன். இதில் நான் வெற்றி பெறவில்லை எனக்கு களைப்பாகவும் திக்பிரமையாகவுமிருந்தது நான் மீண்டும் எனது நண்பர் உணவருந்திக் கொண்டிருந்த இடத்துக்குப் போனது நினைவிருக்கின்றது. அங்கே நின்ற காரின் பின் சீட்டில் ஏறிக்கொண்டு என்னை எட்கார்டவுனுக்கு கொண்டு போய்விடும்படிக் கேட்டதும் நினைவிருக்கின்றது.''

செனட்டர் கென்னடி சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து போய் விட்டதினலும், உடனடியாக பொலிசாருக்குத் தகவல் கொடுக்கத் தவறியதாலும் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பைத் தொடர்ந்து அவர் தாம் தொடர்ந்து பதவியிலிருப்பதா இல்லையா என்பது பற்றி ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது. அடுத்த ஜனதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளராகப் போட்டியிடக் கூடிய தகுதி பெற்றுள்ள இவர், அரசியலிலிருந்து விலகுவதை அவருடைய தொகுதி மக்கள் விரும்பமாட்டார்கள் என்று கருதப்படுகின்றது.

தீ விபத்தில்

## 37 குதிரைகள் பலியாகின

பெங்களூர், ஜூலை 26 பெங்களூரில் ஏற்பட்ட ஒரு தீவிபத்தில் 37 குதிரைகள் மரணமாகியுள்ளன. மிகவும் விலை உயர்ந்த, மிக நல்லரகத்தைச் சேர்ந்தவை யென இவை கருதப்படுகின்றன. குதிரை லாயங்கள் தீயினல் முற்றுக எரிந்து போனதால் அங்கிருந்த 30 குதிரைகள் செத்துப் போய் விட்டன. இதனல் பல லட்சம் ரூபாய்கள் நஷ்டம் என்று தெரிகின்றது.

## 200 பேர் நிரந்தரமாகிறர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் தற்காலிக சிறுதொழிலாளராகக் கடமையாற்றி வந்த 200 பேர் நிரந்தரமாக்கப் படவிருக்கிறர்கள்.

சீமெந்து தொழிற்சாலை சிறு ஊழியர்கள், யாழ்ப்பாண எம்.பி திரு ஜி.ஜி பொனம்பலத்தை சந்தித்து தங்கள் கோரிக்கையைத் தெரிவித்ததைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் எம்.பி சீமெந்துக் கூட்டுத்தாபன தலைவர் திரு.விஜயநாயகாவுடன் தொடர்புகொண்டதனல், சீமெந்து தொழிற்சாலையிலுள்ள தற்காலிக சிறு ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவிருக்கிறது.

## பெற்ருர்தின விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு கனகராயன்குளம் மகாவித்தியாலய பெற்ருேர் தின விழா இம்மாதம் 29-ந்திகதி மாலை வவனியா வட்டாரக் காரியாதிகாரி திரு.க.நவரத்தினம் தலைமையில்கந்தையா அரங்கில் நடைபெறும். வவனியா எம்.பி.திரு.தா.சிவசிதம்பரம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## அதிபர் நிக்ஸன் வெளியிடும் கருத்து

கோவான், ஜூலை 26

**அமெரிக்கா மீண்டும் வியட்னும் போன்ற பிரச்னைகளில் மாட்டிக் கொள்ளாது என்று அதிபர் நிக்ஸன் இங்கு கூறினர்.**

பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, தாய்லாந்து, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அதிபர் நிக்ஸன் இங்கிருந்து புறப்படுமுன் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

ஆசியாவில் அமெரிக்கா தொடர்ந்து பணியாற்றும் அங்கு நிறைவேற்றுவதாக ஏற்றுக் கொண்டுள்ள வாக்குறுதிகளையும்நிறைவேற்றும் என்று கூறிய அதிபர் நிக்ஸன் அமெரிக்கா பசுபிக்கில் ஒருவல்லரசாக விளங்குவதையே விரும்புகிறது என்ருர்.

உலகில் இன்று ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்ட ஒரே நாடுசீனதான் என்று அதிபர் நிக்ஸன் குறிப்பிட்டார். உள்நாட்டுக் குளப்பங்களின் காரணமாக சீன தனதுபுரட்சியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாமலிருக்கிறது என்ருர் அவர்.

ஆசியாவில் ராணுவ ரீதியான உதவிகளை அதிகரிக்க அமெரிக்கா விரும்வில்லை. பொருளாதார உதவிகள் அதிகரிக்கப்படும். ஆனல் அணு ஆயுதங்களைக்கொண்ட நாடுகளால் ஆசிய நாடுகளுக்கு ஆபத்து வருவதைத் தடுக்க அமெரிக்கா எப்பொழுதும் தயாராய் இருக்கும் என்று அதிபர் நிக்ஸன் வலியுறுத்தினர்.

இது சீனவுக்கு அவர் விடுத்த எச்சரிக்கை என்று அவதானிகள் வியாக்கியானம் கூறினர்கள்.

ஆசிய நாடுகளுக்குத்தாம் போகும் போது அங்குள்ள தலைவர்களுடன் விசேஷமாக வியட்னும் போன்ற உலகப் பிரச்னைகளை ஆலோசிக்கக் கூடும் என்ருர் அவர்.

ஆசிய நாடுகள் தமது பாதுகாப்பைத்தாமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்றே தாம் கருதுவதாக அவர் வலியுறுத்தினர்.

## இரத்ததானம்

பருத்தித்துறை, ஞாயிறு வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி, மெதடிஸ்தமிஷன் உயர்மகளிர் கல்லூரி, புலோலிஇந்துக்கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை வர்த்தகக் கல்லூரி ஆகிய இடங்களில் சுமார் 250 மாணவா இரத்ததானம்செய்தனர். இவர்களுக்கு அன்பளிப்பாக சான்றிதழ்களின் மூலம் இவர்களுக்கோ அன்றி இவர்களது உறவினருக்கோ இரத்தம் தேவைப்படும் நேரத்தில் இலங்கையிலுள்ள எந்த இரத்தவங்கியிலும்இவர்கள் தமக்கு வேண்டிய இரத்தம் பெறமுடியுமெனத் தெரிகிறது.

ரைக் காப்பாற்ற முடியாது. குருநாகல்போன்ற பகுதிகளில் இரத்த வங்கியில் இரத்தம் இல்லையென்று அறிவித்தல்கொடுத்ததும்பொது மக்கள் உடனடியாகச் சென்றுஇரத்ததானம் வழங்கும் வழக்கம் இன்று அங்கு வேரூன்றி விட்டது. ஆயிரம் மரணத்தினின்றும் பாதுகாப்பது பன்மடங்கு சிறந்த புண்ணியமாகும்.'' இவ்வாறு வடமாநில இரத்த வங்கி அதிகாரி திரு. ஏ. ஜீவரத்தினம் பருத்தித்துறை வர்த்தகக் கல்லூரி மண்டபத்தில் நடந்தகூட்டத்தில் கூறினர்

## கல்வி நூற்றண்டுவிழா எடுப்பது பொருத்தமற்றது

அராலி, சனி ''ஏட்டுக் கல்வியை மட்டும் கல்வி என்று சொல்லி விட முடியாது பிள்ளை தன் பிதாவின் தொழிலினைப் பயில்வது தொழிற் கல்வி; ஒரு பிள்ளை தன் மாதாவிற்கு உதவி செய்வது குடும்பக்கல்வி. இந் நாட்டில் மனிதன் குடியேறிய நாட்தொட்டே கல்வி இருந்து வந்துள்ளது. கல்விக்கு எவரும் வெள்ளி, பொன், வைர, நூற்றண்டு விழாக்கள் எடுததில்லை. 'கல்வி நூற்றண்டு விழா' என பெயரிட்டு இவ் விழாவைக் கொண்டாடுவதும் பொருத்தமற்றது''

அராலி தெற்கு முருகமூர்த்தி வித்தியாசாலையில் நடைபெற்ற 'சியவச' விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. வே. வி. மூர்த்தி குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. வி. நாகலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில், ''நம் மூதாதையர் கல்வியைக் கற்கும் மாணவனின் உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசியாகிய மூன்று பசிகளையும் தீர்க்கக் கூடியதாக அமைத்திருந்தார்கள். இக்காலக்கல்வி மக்களை வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாகச் செய்துள்ளது'' என்று கூறினர்.

## 'நாவலரை கண்டதுபோன்ற உணர்வு'

யாழ்ப்பாணம், ஞாயிறு 'சைவமும் தமிழும் வளர்த்த நாவலரை நாம் நேரில் காணவில்லை. ஆனல் அவரைக் கண்டது போன்ற உணர்வு இப்போது நமக்கு ஏற்படுகிறது. பல ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றிய கதிர்காமநாதன் அவர்களது சேவை அளப்பரியது.'

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. வை. கதிர்காமநாதனுக்கு பாடசாலை ஆசிரிய மாணவர்களாலும், பழைய மாணவ களாலும் அளிக்கப்பட்ட சேவைநலம் பாராட்டு விழாவில் செல்வி யோகேஸ்வரி பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. வை. கதிர்காமநாதன் பேசுகையில், 'இப் பாடசாலை எனது பேரனர் இவ்வுலகிற்கு விட்டுச் சென்ற அரும்பெரும் சொத்தாகும். இதை நான் எனது பிள்ளைகளைவிட மேலாக நேசிக்கிறேன். இரவுபகலாக இதன் வளர்ச்சி குறித்தே கனவு காண்கிறேன். என்று இப்பாடசாலை மகாவித்தியாலயமாக உயர்த்தப்படுகிறதோ அன்றுதான் என் ஆத்மா அளவில்லாதமகிழ்ச்சியை அனுபவிக்கும்' என்ருர்.

திருமதி அ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உடுவில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ச. இராசா அவரைப் பாராட்டிப் பேசினர். உடுவில் கிராமசபைத் தலைவர் ச. முத்துலிங்கமும் பேசினர்.

பெற்ருர் ஆசிரியர்சங்கக் காரியதரிசி திரு. சி. கணபதிப்பிள்ளை கிராமசேவகர் திரு. க. நல்லையா உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர். முடிவில் தங்கச்சங்கிலியொன்றும் ஆசிரியருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பாடசாலை மாணவ மாணவிகளின் நடன நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### ஆயுள்வேத மகாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு அகில இலங்கை சித்த ஆயுள் வோத வைத்திய சங்கத்தின் 38-வது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 28ம் திகதி காலை கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பு அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவை சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான திரு. கு.பாலசிங்கம் ஆரம்பித்து வைப்பார்.

ஆயுள்வேதக கமிஷனர் திரு.விமால்நவகமுவ வைத்தியாச்சாரி குணசேகரா ஒவிற்றகலை ஆகியோர் உட்பட பலர் இங்கு சொற்பொழிவாற்றுவர். (கா.நி)

## 'ஹரிஜனரின் போரரட்டமே இந்தியாவுக்கு சுதந்திரமளித்தது'

உடுவில், சனி 'மகாத்மா காந்தியின் சாதனைகளும் போதனைகளும் மனித குலத்தின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் மிக இன்றியமையாதவை. மகாத்மாவைப் பற்றிப் பேச்சளவில் நாம் வைத்துக்கொள்ளாது அவரது போதனைகளை நடைமுறையில் கொண்டுவரவேண்டும். அஹிம்சை, ஜீவகாருண்ணியம், மனிகுல, ஒற்றுமை இவற்றை முக்கிய நோக்காகக் கொள்ளவேண்டும். விழாக்கள் எடுப்பதை விரும்பவில்லை. ஜாதிமதஇனபேதம் ஒழிந்தஒருமனிதகுல சமுதாயத்தை உருவாக்குவதே மகாத்மாவுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனகும். இந்தியாவில் ஐந்து கோடி ஹரிஜன மக்கள் இந்துக்களின்கீழ் கஷ்டப்பட்டிருந்தபோது அந்நிய ஏகாதிபத்தியத்தை ஒழித்து நாம் 'இந்தியர்' என்ற கௌரவத்துடன் வாழ ஒன்றுபடுங்கள் என்ற மகாத்மாவின் ஒரு சொல் கேட்டு அத்தனை ஹரிஜனமக்களும் ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகப் போராடியதனல் தான் இந்தியா விடுதலையடைந்தது.'

சுன்னுகம் பட்டினசபை நூல்நிலைய ஆய்வுக்குழுனர் மகாத்மா காந்தி நூற்றண்டு விழாவைக்கொண்டாடிய போது சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு பொ. நாகலிங்கம் 'மகாத்மாவின் போதனையும் சாதனையும்' பற்றிப் பேசிய போது இவ்வாறு குறிப்பிட்டார்.

பட்டினசபை விளையாட்டு மைதானப் பந்தலில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் திரு. கு. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மகாத்மாவின் 'ஹரிஜன சேவை' பற்றி ஆசிரியர் திரு. வல்லிபுரம் பேசினர். காந்தி சேவா சங்கத் தலைவர் முதலியார் திரு சி. சின்னத்தம்பி, 'திருவள்ளுவரும், காந்தியும்' பற்றி உரையாற்றினர்.

திரு. மா. நடராசா நன்றியுரை கூறினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 27—7—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

*344 மீ அன் 61 மீ*

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

*344 மீ அன் 49 மீ*

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம் 1-00 மாணவர் மன்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

*344 மீ அன் 61 மீ*

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஓடி விளையாடுபாப்பா, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வயலின் இசை, 7-35 வானெலி குறுக்கெழுத்துப் போட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நாதசுரம், 9-30 நாடகம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'ஒரே இடத்தில் ஒன்றுசேரும் மாறுபட்ட பாதைகள்தான் சமயங்கள். ஒரே இலட்சியத்தைத்தான் அடையப்போகிறோம் என்றால், எந்தப் பாதையில் சென்றால்தான் என்ன?

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 12-ந்திகதி (27-7-69)

## கடற்படைத் தொல்லை

திருக்கோணமலைப் பகுதியில் முள்ளிப்பொத்தானை, பழம்பத்தாறு ஆகிய குடியேற்றத்திட்டங்களைச் சேர்ந்த மக்களை கல்முத்தியான் குளத்துக்குச் சமீபத்தில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் தொல்லைப்படுத்துவதாகவும் சமீபத்தில் அங்கு காட்டுக்குள் விறகு பொறுக்கச் சென்ற குடியேற்றவாசிகளைக் கடற்படையினர் தொல்லைப்படுத்தியதுடன் 24மணிநேரம் தடுத்துவைத்திருந்தனர் என்றும் பிரதமரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது. குடியேற்ற வாசிகளை கடற்படையினர் இம்சைப்படுத்துவதாகப் புகார்செய்துள்ள மூதூர்த் தொகுதியின் இரண்டாவது பிரதிநிதி ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத், கடற்படையினரை அங்கிருந்து உடனடியாக அகற்ற வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். குடியேற்றத்திட்டங்களை அமைத்து உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் தீவிர அக்கறை கொண்டுள்ள பிரதமர், குடியேற்ற வாசிகளுக்குக் கடற்படையினரால் ஏற்படும் தொல்லைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்க முன்வருவாரென எதிர்பார்க்கலாம்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவைகள் நாட்டின் பாதுகாப்புப்படைகள். உள்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டப் பொலிஸ் படையினால் முடியாத கட்டத்தில் அவைகளுக்கு உதவியாகவும் அதே சமயம் வெளிநாடுகளினால் நாட்டுக்கு ஆபத்து நேரிடும்போது அதை எதிர்த்துப் போரிட்டு, நாட்டைக்காப் பாற்றுவதும் பாதுகாப்புப் படைகளின் பணி. நமது நாட்டில் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக் கடத்தலையும் தடுப்பதற்கு முப்படைகளும் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டின் கரையோரப் பகுதிகள் பலவற்றிலும் இவை முகாமிட்டிருக்கின்றன. கள்ளக்கடத்தல், சட்டவிரோதக்குடியேற்றம் குறைந்திருந்தாலும் முற்றாக ஒழியவில்லை. இதே சமயம் இந்தப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரும் கடற்படையினரும் தங்கள் முக்கிய கடமையைவிட, பொதுமக்களைத் தொல்லைப்படுத்துவதாகச் செய்யப்படும் புகார்களுக்குக் குறைவில்லை. வல்வெட்டித்துறை, மயிலிட்டி, முல்லைத்தீவு முதல் பல இடங்களிலும் கள்ளக்குடியேற்றத்தையும் கள்ளக்கடத்தலையும் தடுத்தார்களென்று கிடைத்த தகவல்களையும் செய்திகளையும் விட, பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தினார்கள். துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள் என்று கிடைத்த தகவல்களும் புகார்களுமே அதிகம்.

கடந்த இருபது ஆண்டுகளில் நமது முப்படைகள் செய்த கடமைகளையும் அவர்கள் மீது செய்யப்பட்ட தாக்குதல் பற்றிய புகார்களையும் ஆராய்ந்து இப்படைகளின் பணிகளை வரையறைசெய்வது அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் நல்லது. அவசியமேற்பட்டால் இப்படைகளை உணவு உற்பத்தி இயக்கத்துக்கும் பயன்படுத்தலாம். சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவற்றைத் தடுக்கும் பொறுப்பை முற்றாகப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிட்டு இராணுவம், கடற்படை முகாம்களைக் கரையோரப் பகுதிகளிலிருந்து அகற்றிவிடுவதால் என்ன கெட்டுவிடும்?

## நூல் நிலையங்கள்

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் [illegible]

இதை யாரும் மறுப்பதற்கில்லை. இதை உணர்ந்து தேசிய நூல்நிலைய சேவை [illegible]

# ஒவ்வொரு பாராளுமன்றம் கூடும்போதும் நடக்கும் நாடகம்

**ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கிய தமிழரசுக்கட்சியினர். என்று அந்தக்கட்சியின் தொடர்பை அறுத்துக்கொண்டு வெளியேறினார்களோ அன்றே 'தேசியம்' பறந்து விட்டதென்கிறார் செனட்டர் சு. நடராசா. செனட்சபையில் சிம்மாசனப்பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு திருத்தப்பிரேரணை கொண்டுவந்து அவர் ஆற்றிய உரையின் முதற்பகுதி இன்று பிரசுரமாகிறது.**

தமிழரசுக் கட்சியின் திருத்தப் பிரேரணைகளைப் பிரேரிக்கின்ற பொழுது, சென்ற நான்கு வருடங்களாக தேசிய அரசாங்கம் என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கம் தங்களுடைய கொள்கைக்கு அமைவாக நடக்கவில்லையென்பதை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டவனாகின்றேன். அதன் காரணமாகத்தான் நாங்கள் உங்களுடன் சேர்ந்திருந்த பொழுதிலும், சேர்ந்திருந்து கழுத்தை அறுத்தவர்களாக நாங்கள் மாறக்கூடாதென எண்ணி கண்ணியமாக, கனவான்களாக நாம் நடந்து, ஒற்றுமையைக் காப்பாற்ற, எங்கள் குரலை எழுப்பாதிருந்தோமென்பதைச் சொல்லிவைக்க விரும்புகிறேன். கடந்த நான்கு ஆண்டுகளாக 'தேசியம், தேசியம்' என்று சொல்லி நாட்டு மக்களை நல்வழியில் கொண்டுசெல்வார் என்று நம்பியிருந்த கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்கள் வகுப்புவாதக் கும்பல்களின் வீண் கருத்துக்களை மனதில் எடுத்துக் கொண்டதனால் நாட்டில் நிலவியிருந்த ஒற்றுமையைக் கெடுக்கும் சூழ்நிலை ஏற்படச் செய்தார். சென்ற நான்கு வருடங்களின் முற்பகுதியில், கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்கள் ஒரு கனவான், கூறிய வாக்குறுதியை ஒருபோதும் கைவிடமாட்டார் என்று எண்ணினோம். எங்கள் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கல்முனை மகாநாட்டில் கூட அவர் ஒரு விருந்தினராகக் கலந்து கொண்ட பொழுது, "வாக்குறுதியை நான் ஒருபோதும் கொடுக்க மாட்டேன்; கொடுத்தால் அந்த வாக்குறுதியை நான் கட்டாயமாகக் காப்பாற்றுவேன்'' என்று சொல்லிவைத்தார் அந்தப் பெருமகன்.

### வாக்குறுதியை மறந்துவிட்டார்

வாக்குறுதியை மறந்து விட்டார். அவர் கொடுத்த வாக்குறுதியின் பெயரால் தான் தமிழரசுக் கட்சி அவருடைய கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்தை அமைத்ததென்பதை இலங்கை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். நாம் ஒற்றுமையை நாடி, நாட்டின் வளர்ச்சியை நாடி நாட்டு மக்கள் இரு இனமாக ஒற்றுமையாக சகோதரத்துவத்வம் பெருமலிருந்த திருவாளர் திருச்செல்வம் அவர்களும் வேறுசிலரும்கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கைகள் இன்னின்னவை என எடுத்து விளக்கி, எழுதிச் சமர்ப்பித்த பின்னர் அவையெல்லாவற்றையும் கணிசமாகக் கவனித்து, விடவேண்டியனவற்றை விட்டு, ஒற்றுமையாக ஓர் ஒப்பந்தத்தை ஆக்கிக் கொண்டனர் என்பதை கௌரவ டட்லி சேனநாயக்க அவர்கள்மறுக்கமாட்டார் என நம்புகிறேன்.

### ஒவ்வொரு முறையும் நடக்கும் நாடகம்

கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களும் நாங்களும் ஒப்பந்தத்தின் காரணமாக அவற்றை வெளியிடவில்லை. ஏனெனில், அது ஓர் ஒப்பந்தம், அதுவும் கனவான்களின் ஒப்பந்தம் என்றபடியாம் அவற்றை வெளியிடவில்லை. அதே நேரத்தில் ஒன்றைமட்டும் மற்றக் கட்சியினர்மறக்கக் கூடாது. நாங்கள் கௌரவ டட்லிசேனநாயக்கவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும்வரை ஏனைய கட்சியினரும் எங்களுக்குப் பின்னிருந்து அதற்காகப் பாடுபட்டார்கள். எல்லோரும் இலங்கைவாழ் மக்களின் முன்னேற்றத்துக்கும் ஒற்றுமைக்கும் தேவையான காரணங்களுக்காகவே பாடுபட்டார்கள் என்பதை நாம் மறுக்கவில்லை. அதனை நாம் மறக்கவும் முடியாது. ஆனால், இந்தச் சரித்திரம் ஒவ்வொரு பாராளுமன்றம் கூடும் நேரத்திலும் நடக்கும் ஒரு நாடகமாகவே இருக்கின்றது என்பதை நான்சொல்லித்தான் ஆகவேண்டும். காலத்துக்குக் காலம் தாங்கள் ஆதிக்கம் பெறுவதற்காக தமிழ் மக்களின் பிரதிநிதிகளைச் சார்ந்து, அவர்களின் உதவியைப் பெற்று, பதவியில் அமரும் வரைக்கும் அதை [illegible] பிடித்திருந்து, [illegible] அமர்ந்த பின்னர் அவற்றை [illegible]

கத்தினரும் பொதுமக்களும் ஏற்றுக் கொள்வார்கள். 1965ஆம் 66ஆம் 67ஆம் ஆண்டுகளில் இலங்கையில் தேசிய அரசாங்கம் இருக்கின்றது. இலங்கை மக்கள் அவர்கள் சிங்கள மக்களாக இருந்தாலும் சரி, தமிழ்மக்களாக இருந்தாலும்சரி-இருசாராரும் ஒற்றுமையாக வாழ்கிறார்கள்' என்ற கவனம், போக்கு, நினைவு மக்களின் மனதில் இருந்தது. 'காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்ட தமிழ் மக்கள் இந்த முறைஏமாற மாட்டார்கள், ஒரு கௌரவமான கண்ணியமான பிரதமருடன் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். என்று நாட்டு மக்கள் நம்பியிருக்க கட்சியின் பிரமுகர்கள் நம்பியிருக்க, இன்று அந்த நம்பிக்கையை இழக்கவேண்டிய நிலை அரசாங்கத்துக்குவந்துவிட்டது.

### சிங்கள ஏகாதிபத்தியம்

நாங்கள் கௌரவ பிரதமர் அவர்களைப் பல முறை சந்தித்த போது தமிழ் மக்கள் சிங்கள மக்களுடைய உரிமையைப்பறிக்கக் கூடிய முறையில் ஒன்றும் கேட்கவில்லை. தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளையே கேட்கின்றார்கள்என்பதைவற்புறுத்தியிருக்கின்றோம். நாம் இந்த நாட்டில் உரிமையுள்ள மக்களாக வாழவேண்டும். அரசுரிமையுடன் வாழவேண்டும். அந்நிய ஏகாதிபத்தியத்தில வாழ்வதைப் போல சிங்கள மக்களின் ஏகாதிபத்தியத்தில் வாழ தமிழ் மக்கள் விரும்பவில்லை விரும்பவும் மாட்டார்கள். அவர்கள் அடிமைகளாக இருக்கவும் மாட்டார்கள் என்பதைச் சொல்லி வைக்கவிரும்புகிறேன்.

இந்த நாட்டின் சரித்திரத்தை எடுத்துப்பார்த்தால இந்த நாட்டில் எவ்வளவு காலம் சிங்கள அரசாங்கம் நடந்திருக்கிறதோ அது [illegible] காலமும் ஏன் அதற்கு மேலும் தமிழ் மக்கள் அரசாங்கம் நடந்தி [illegible]

சொல்லிவைக்க விரும்புகிறேன் அந்தப் பேரவாவின் பெயரால் அந்த உழைப்பின் காரணமாக இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் இந்நாட்டில வாழ்கின்ற இரு சகோதர இனங்களும் ஒற்றுமையாக நேர்மையாக இந்த நலல நாட்டிலே நலல முறையில வாழ்வார்கள். என எண்ணினோம். ஆனால எங்களுடைய சகோதரர்கள் சிங்களச்சகோதரர்கள் ''நாம் ஆதிக்கத்தைப் பெற்று விட்டோம்; நாம் ஆதிக்கத்தைப் பெற்றதால தமிழ் மக்கள் எங்களுடைய அடிமைகள்'' என்று எண்ணி நடக்கத் தொடங்கினார்கள். அதுவரை நாட்டில சௌஜன்யமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களுக்குப் பிரிந்து வாழ வேண்டுமென்ற மனப் பான்மை அதன் பின்னர் ஏற்பட்டது. சுதந்திரத்துக்காகப் போராடி வந்த காலத்தில, தமிழ் மக்களோ சிங்கள மக்களோ 'நாம் வேறு, அவர்கள் வேறு'' என்று பேசாது இலங்கை சுதந்திரமடைய வேண்டுமென்று ஒரே குரலில் கோரி நின்றார்கள் என்று பெருமையுடன் சொல்லக் கூடியதாக இருந்தது.

### மலைநாட்டுத்தமிழர்கள்

எந்தக் காலத்திலும், சுதந்திரப் போராட்டத்திலே தமிழ் பேசும் மக்கள் முன்னணியில் நின்றார்கள் என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். அப்படியிருந்தும் சுதந்திரம்பெற்ற சில காலத்திற்குப்பின், மலைநாட்டில வாழுகின்ற தமிழ் சகோதரர்களின் வாக்குரிமையைப் பறித்தவுடன் தமிழனுக்கு முதலடி அடிக்கப்பட்டது. தமிழ்ச் சமுதாயத்தின்பலத்தைக் குறைக்கும் ஒரே நோக்கத்துக்காக அந்தப் பகுதியில் வாழுகின்ற மக்கள் தமிழ் பேசுகின்ற காரணத்துக்காக- அவர்களுடைய வாக்குரிமை- பிரஜா உரிமை-பறிக்கப்பட்டது. வாக்குரிமையைப் பறிப்பதன் மூலம் மக்களின் பலத்தைக் குறைக்கலாம், அரசியலுரிமையைக் குறைக்கலாம் என்ற நோக்கத்தோடு தான் இச்செயல் நடந்ததென்பதை நாம் உணர்ந்தோம். அன்றுதான் தொடங்கியது நாட்டிலே பிரிவினை.

அன்றுதான் நாமும் சமஷ்டி ஆட்சியைப் பெறுவதற்கான ஒரு கட்சியை [illegible]

# ஐயாறன் எழுதுவது

கதிர்காமத்திலே இப்போது திருவிழா நடைபெறுகிறது. அங்கு செல்ல முடியாதவர்களுக்காக, முருகன், ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் வந்து கருணையுடன் அருள்செய்கின்றான்.

முன்னரெல்லாம் கதிர்காமம் செல்லுவதென்றால், திரும்பிவருவது சந்தேகமாம். யானைக்காட்டு வழியாகச் செல்லவேண்டும் காட்டுமிருகங்கள் தாக்கக்கூடும். மிருகங்களின் ஆபத்துக்கள் இப்போது இல்லைத்தான். ஆனால் சில மனிதர்கள் மிருகங்களைவிடகொடியவர்களாக மாறிவிடுகிறார்களே!

முருகனிடம் உத்தரவு பெற்றே முன்னர் யாத்திரீகர் பலரிடம். பயணம் சொல்லிவிட்டு கதிர்காமத்துக்குப்புறப்படுவார்கள் சில வருடகாலம், பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் அனுமதிச் சீட்டுப்பெற்றே செல்ல வேண்டுமென்ற கட்டுப்பாடுமிருந்தது. அந்தக்காலத்தில், கொழும்பிலே வர்த்தகம் செய்த நகரத்தார் முருகனுக்கு இருகோயில்கள் கட்டி, ஆடிவேல் விழாவை மிக பக்தியுடன் கொண்டாட ஆரம்பித்தனர்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி, ஜவுளி வர்த்தகர்கள், செம்மாங்கோடு எனுமிடத்தில் ஒரு முருகன் கோயில் கட்டி, அவர்களும் ஆடிவேல் விழாவைக்கொண்டாடி வருகின்றனர். இருகோயில் நிர்வாகிகளும் தமிழகத்திலிருந்து விசேஷ நாதசுர இசைக் கலைஞர்களை வரவழைத்து, கலை விருந்துகளை போட்டா போட்டியுடன் அளித்துவருகின்றார்கள். சட்டதிட்டங்கள் கடுமையாகி, இந்திய வர்த்தகர்களில் பலர் தாய் நாட்டுக்குத்திரும்பிவிட்டாலும், இக்கோவில்களை நன்கு பரிபாலிக்கவும், ஆடிவேல் விழாவை சிறப்பாக நடத்தவும் ஒழுங்குசெய்துள்ளது போற்றத்தக்கது. நாம் நமது சொந்த ஊர்களில் திருவிழா நடத்துவது அவ்வளவு பெரிய காரியமல்ல. வர்த்தகத்துக்காக வேறு நாட்டுக்கு வந்த இடத்தில் கோயில் கட்டி, பக்தி சிரத்தையுடன் வழிபாடுகளையும் திருவிழாவையும்நடத்தி வருவது மிகவும் பாராட்டத்தக்கதென்றும், தலைநகரான கொழும்பிலே ஆடிவேல் விழா நடப்பதும் சமய பேதமின்றி பல்லாயிரக்கணக்[illegible]யுடன் பவனி வருகையில், அவரை தரிசிக்கும்பாக்கியம் பல வருடங்களாகக் கிடைத்துவந்தது. இம்முறை கொழும்புக்குச்செல்லமுடியவில்லை என்றாலும், இங்கிருந்தே சிந்தையால் சென்று தரிசிக்கமுடியும் தானே!

''முருகா! எங்கள் யாழ்ப்பாணத்திலே சில இந்துக்கள் இக்காலத்திலும் பௌத்தர்களாக மதம் மாறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே. உன் திருவுள்ளம் என்னவோ?'' என்று கேட்டேன். முருகன் சிரித்துவிட்டு, ''கதிர்காமத்தில் வந்துபார்'' என்றார். அங்கு சமய வேற்றுமைகள் மறைந்து விடுகின்றன. முருகனை வழிபட சிங்கள பௌத்தர்கள், திருநீறுபூசி, சந்தனப் பொட்டுவைத்து, 'அரோகரா' கோஷமிட்டு, காவடி ஆட்டங்கள் ஆடுவதும் குடும்பம்குடும்பமாக, கையில் காளாஞ்சித்தட்டை வைத்துக்கொண்டு, மணிக்கணக்காக 'கியூவரிசையில் முருகவழிபாட்டுக்காக பக்தியுடன் காத்துத்தவம் கிடப்பதும் கண்கொளாக் காட்சியாகும் சிலர் வேற்றுமைப் பிளவுகளை ஏற்படுத்த முயன்றாலும், முருகன் இருபெரிய சமூகங்களுக்குமிடையே ஒற்றுமையை வளர்க்கும் மாபெரும் திருவிளையாட்டைச் செய்துவருவதைப் பார்க்கிறோம். முருகனை நம்பி வாழ்பவர்களுக்கு ஏது பயம்? என்ன கவலை? நமது சிக்கல்கள் அவனுக்குத்தெரியாதா? அவன் நம் மனதிலுள்ள அழுக்குகளையெல்லாம் தீர்த்து நிச்சயம் நம்மைக்காப்பான் என்பதில் என்ன சந்தேகம்?

0 0 0

''அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும், வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும், நெஞ்சில் ஒரு கால் நினைக்கின் இரு காலும் தோன்றும் முருகா என்று ஓதுவார்முன்''

## ஞானகுமாரியின் இசையரங்கேற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் கள்ளக் ... விடும்?

## நூல் நிலையங்கள்

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஆட்சிமன்றத்தில் நிறைவேறிவிட்டது. தமிழ் அரசுக்கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகள் தோல்வியடைந்தன. இது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆளும்கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் இருக்கும்வரை சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மட்டுமல்ல எதிர்க் கட்சியினர் கொண்டு வரும் எந்த மசோதாவும் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்படுவதில் சிரமமிருக்காது. இம்முறை சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் பலவற்றையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம். அடுத்த பொதுத் தேர்தலுக்கு முதல் நிகழ்த்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கம் இதுவாதலால் அதில் கூறப்பட்டவற்றில் பெரும்பாலனவற்றை எப்படியாகுதல் செயல்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யும் என்பது உறுதி.

சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் திட்டங்கள் பற்றி இதற்கு முன்னரும் இப்பத்தியில் நாம் ஆராய்ந்திருக்கிறோம். ஆயினும் நாட்டின் கல்வி விருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் நூல்நிலையவசதிகள்பற்றிக் கவனம் செலுத்துவது அவசியம்.

''இந்நாட்டின் புத்தகச் செல்வங்களை நன்கு பயன்படுத்தும் நோக்குடன், இத்தீவிலுள்ள நூல் நிலையங்களை ஒருங்கிணைத்து, நன்னிலைப்படுத்தி, அபிவிருத்தி செய்வதற்கு தேசீய நூல்நிலைய சேவைகள் சபையொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நூல்நிலைய வசதிகள் ஒரு நாட்டின் கல்வி அமைப்பில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நமது நாட்டில் நூல்நிலையவசதிகள் மிகமிகக் குறைவு. இதை யாரும் மறுப்பதற்கில்லை. இதை உணர்ந்து தேசீய நூல்நிலைய சேவைகள் சபையொன்றை நிறுவ முன்வந்துள்ள அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

நல்ல புத்தகங்கள் கிடைக்க வேண்டும்; நல்ல நூல்களையே மக்கள் படிப்பதற்கு வழிகாட்ட வேண்டியதும் அவசியம். இதற்கு நூல் நிலையங்கள் பெருமளவில் பணிபுரிய முடியும்.

கிராமங்கள் தோறும் நூல்நிலையங்கள் நிறுவப்பட வேண்டும். நூல்நிலையங்கள் அமைக்கப்படுவதற்கு அரசாங்கத்தையோ, அரசாங்கத்தின் உதவியையோ மட்டும் நம்பியிருக்கக் கூடாது. உள்ளூராட்சி மன்றங்கள்தான் நூல் நிலையங்களை அமைக்க வேண்டுமென்றும் அவற்றையே உள்ளூர் மக்கள் நம்பியிருக்க வேண்டுமென்றும் எதிர்பார்ப்பது சரியல்ல.

வசதி படைத்த மக்கள் தங்கள் சொந்தச் செலவில் தமது வீட்டில் அமைத்துக் கொள்ளும் நூல்நிலையங்களிலிருந்தும் பொது மக்களுக்கு உதவ வேண்டும். வெளிநாடுகள் பலவற்றில் உள்ளது போல் வீடுதோறும் சென்று நல்ல பயனுள்ள நூல்களை வழங்குவதற்கு நடமாடும் நூல்நிலைய வசதிகள் செய்வதும் நல்லது.

## வல்வெட்டி உபதபாலதிபர்

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டி உப தபால் நிலைய அதிபராக திரு. நா. பாக்கியலிங்கம் தெரிவுசெய்யப் பட்டுள்ளார். வல்வெட்டித்துறை பட்டினசபையின் உப தலைவரான இவர் தமது பதவிக்கான கயிற்சியை வல்வெட்டித்துறை தபால் நிலையத்தில் பெறுவார். செப்டம்பர் மாதத்தில் வல்வெட்டி உப தபால் நிலையம் திறந்து வைக்கப்படும்.

...த்த தென்பதை இலங்கை மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்ர்கள். நாம் ஒற்றுமையை நாடி, நாட்டின் வளர்ச்சியை நாடி நாட்டு மக்கள் இரு இனமாக ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் வாழவேண்டுமென்ற எண்ணத்தை மனதில் கொண்டுதான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு முனைந்தோம். நாம் என்று அந்தக் கட்சியை விட்டு விலகினோமோ அந்த நேரத்திலேயே தேசியம் பறந்துவிட்டது என்பதை நான் தைரியமாகச் சொல்லுகின்றேன். தேசியம் தேசியம் என்று கூக்குரல் போடுவதால்பிரயோசனமில்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் எத்தனை பேர் சனப் பிரதிநிதிகள் சபையில் இருக்கிறார்கள். ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதித்துவம் பெற்ற தமிழரசுக் கட்சிதான் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது; மறைக்கவும் இயலாது. அந்தக் காரணத்தைக்கொண்டுதான்- தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதித்துவம்பெற்ற ஒரே ஒரு கட்சி தமிழரசுக் கட்சி என்னும் காரணத்தைக் கொண்டுதான் வேறு எந்தக் கட்சியையும் கவனிக்காது வேறு எந்தக் கட்சிகளின் தலைவர்களுடனும் கலந்தாலோசியாது 1965 ம் ஆண்டு மார்ச் மாதம் 20ம் திகதி தேர்தலுக்குப் பின்னர் எங்களை அழைத்து அவர்களுடைய இல்லத்திலே பேரம் பேசினார்கள். அப்போது நாட்டைக்காக்க வேண்டும் நாடு இவ்வளவு காலமும் சீர் கெட்டிருந்தது. நாட்டை நாம் நல்ல பாதையில் நடத்த வேண்டும். அதற்கு நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்று கௌரவ டட்லிசேனநாயகா கேட்டார். அந்த நேரத்தில் தமிழ் மக்களின் தலைவராக இருந்த- தமிழ் ம்க்களின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்ட —திருவாளர் செல்வநாயகம் அவர்களும் அங்கத்து

### அறிவித்தல்

மூன்று (3) ''யேல்'' ஆமைப் பூட்டு திறப்புக்கள் அடங்கிய திறப்புக் கோர்வை ஒன்று 25-7-69 மாலை 5 மணிவரையில் சுன்னாகம் காங்கசன்துறை வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தோர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைப்பின் எமது நன்றி உரித்தாகும். 1275

தமிழ் மக்களின் பிரதிநிதிகளைச் சார்ந்து, அவர்களின் உதவியைப் பெற்று, பதவியில் அமரும் வரைக்கும் அதை மறக்காமல் கட்டிப் பிடித்திருந்து, பதவியில் அமர்ந்த பின்னர் அவற்றை மறந்து, மறுக்கக் கூடிய நிலையில் உள்ள கட்சிகளை நாம் இலங்கையிலதான் பார்க்கிறோம் என்பதை மிக வும்வருத்தத்துடன் சொலல வேண்டும்.

இந்த நாட்டில 1965-ஆம் 66ஆம் 67ஆம் ஆண்டுகளிலிருந்த சீரான, ஒற்றுமையான நிலைமை இன்று இல்லையென்பதை அரசாங்...

...த்தை எடுத்துப்பார்த்தால இந்த நாட்டில் எவ்வளவு காலம் சிங்கள அரசாங்கம் நடந்திருக்கிறதோ அது வரை காலமும் என் அதற்கு மேலும் தமிழ் மக்கள் அரசாங்கம் நடந்திருக்கின்றதென்பதைச் சிங்கள மக்களும் மறுக்க முடியாது. அந்நிய ஆட்சியிலிருந்து இந்த நாடு விடுதலை அடைய வேண்டுமென்றும் இந்த நாடு சுதந்திர நாடாக இருக்க வேண்டுமென்றும் ஆசைப்பட்டு உழைத்த மக்களின் பொரும்பான்மை மக்கள் தமிழ் மக்கள் என்பதை நான் பெருமையாகச்

# பிரிட்டிஷ் இறக்குமதித் தீர்வை

...... அவதானி ......

பிரிட்டன், தனது பழைய காலனி நாடுகளையெல்லாம் சேர்ந்து பிரிட்டிஷ் காமன்வெல்த் என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கியபோது, இதனால் பொருளாதாரத் துறையில் இந்த நாடுகளுக்கு ஊக்கமேற்படும் வகையில் உதவிகள் கிடைக்குமென்றும், இறக்குமதித் தீர்வை விஷயத்தில் சலுகைகள் இருக்குமென்றும் கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கம் காமன்வெல்த் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு அளித்துவந்த 'கோட்டா' சலுகைமுறையை ஒழித்துவிடவும், 1972ம் ஆண்டிலிருந்து இறக்குமதித் தீர்வைகளை 15 வீதம் அதிகரிக்கச் செய்திருக்கும் புதிய முடிவு இந்த நாடுகளுக்குப் பெரிதும் கவலையளிப்பதாகவுள்ளது. வளரும் நாடுகளுக்குப் பிரிட்டனின் இந்த நடவடிக்கை கருணையற்ற செயலாக மட்டுமல்ல, பிரிட்டனுடனான இந்த நாடுகளின் வர்த்தகத்தை நசுக்கிவிடும் செயலாகவும் கருதப்படுகின்றது.

இப்பொழுதும்கூட வளரும் நாடுகள் பிரிட்டனிடமிருந்து மூலப்பொருட்கள் போன்றவற்றை இறக்குமதிசெய்வதின்மூலம் வெளிநாட்டுச் செலாவணியில் நஷ்டமடைந்துவருகின்றன. சமீப காலத்தில் இந்தியா போன்ற வளரும் நாடுகள் சில இறக்குமதியால் ஏற்படும் இந்த நஷ்டத்தை, ஏற்றுமதி அதிகரிப்பின் மூலம் சரிசெய்துகொள்ள முயற்சிகள் மேற்கொண்டன. இந்த நிலைமையில் பிரிட்டனின் புதிய இறக்குமதித் தீர்வை யோசனை இந்தியா, இலங்கை போன்ற வளரும் நாடுகளின் வெளித் தேச வர்த்தகத்தின் மீதான பெரிய தாக்குதலாகும்.

பிரிட்டனின் புதிய தீர்வைக் கொள்கை இந்தியாவில் பலத்த ஆட்சேபத்தைக் கிளப்பியிருக்கின்றது. இந்திய ஆட்சிமன்றத்திலும் இது காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

இதற்குப் பிரிட்டன் தெரிவித்துள்ள சமாதானத்தைப் பார்க்கையில் வெந்த புண்ணில் வேல்கொண்டு பாய்ச்சும் கதையாகத் தோன்றுகின்றது. இன்னொரு முறையில் சொல்வதானால், இந்தியாவின் வெளித் தேச வர்த்தகத்தை நசுக்கிவிட்டு, அதற்குப் பதில் உதவிகள் தருகிறோம் என்று கூறுவதுபோலாகும் எனலாம்.

இந்தியா மற்றும் காமன்வெல்த் நாடுகளுக்குப் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் அளிக்க முன்வரும் உதவிகளிலுள்ள போலித்தனத்துக்கு இது ஓர் உதாரணமாகக் கொள்ளலாமா? இந்த நிலைமையில் வளரும் நாடுகள், பிரிட்டன் போன்றவற்றின் உதவிகளில் நம்பிக்கை இழப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்த அடிப்படையிலேயே பல நாடுகள் சோவியத் யூனியனின் உதவிக்குப் போகின்றன.

...தான் இச்செயல் நடந்ததென்பதை நாம் உணர்ந்தோம். அன்றுதான் தொடங்கியது நாட்டிலே பிரிவினை.

அன்று தான் நாமும் சமஷ்டி ஆட்சியைப் பெறுவதற்கான ஒரு கட்சியை ஸ்தாபித்தோம். அன்றுதான் மனவேற்றுமையின் விகாரம் தொடங்கியது. இதன் மத்தியில், சிங்கள மக்களுக்கிடையிலே இருந்த கட்சிகள் இரண்டிற்கிடையில் யார் முன்னுரிமை பெறலாம், எந்தக் கட்சி முதலில்குரலெழுப்பலாம் என்று ஏற்பட்ட மன எண்ணத்தின் பிரதிபலிப்புத்தான் 1950 ஆம் ஆண்டில் களனிமகாநாட்டில் யூ. என். பி. கட்சியினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள மசோதாவாகும். அதற்குப் பின்னர், காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அவர்கள் ''இதை நான் முறியடிக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி செய்வதற்கு முன் நான் செய்ய வேண்டும்; எனவே 24 மணித்தியாலங்களுக்குள் நான் தனிச் சிங்கள மசோதாவை நிறைவேற்றுவேன்' என்று கங்கணம் கட்டினார். இரு கட்சியினரும் போட்டி போட்டுக் கொண்டு வந்தார்கள். இந்தப் போட்டியின் காரணமாகத் தான் இந்த நாட்டிலே சுதந்திர உரிமையுடன், அரசியல் உரிமையுடன் வாழ்ந்த மக்கள்-- அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்த மக்கள்—சிங்கள மக்களைச் சம்சயக் கண்கொண்டு நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அடுத்து, 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி நடந்தது ஒரு சம்பவம். இன்றிருக்கும் தமிழனும் அதை மறக்கமுடியாது. இனிமேல் பிறக்கப் போகின்ற தமிழனும் மறக்க முடியாது. ஒரு தமிழனும் மறக்க முடியாத சம்பவந்தான் அது. அதாவது அன்று தான்தனிச்சிங்கள மசோதாவைக்கொண்டுவந்து திணித்தார்கள். அன்று தான் இந்த நாட்டிலே வாழுகின்ற மற்ற இன மக்களுக்குப் பாஷை உரிமை இல்லையென்று காட்டினார்கள். அன்றுதொடங்கிய பாஷைப் போராட்டம் 1965-ம் ஆண்டுவரை நடந்து கொண்டுவந்தது. காலத்துக்குக் காலம் பிரதமர்கள் வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். கனவான் டட்லி சேனநாயக்கா அவர்களைப் பற்றி நான் ஒரு உண்மையைச் சொல்லிவைக்க விரும்புகிறேன். 1966ஆம் ஆண்டு தமிழ்மொழி விசேட சரத்துகள் மசோதாவைச் சமர்ப்பித்து அதைச் சட்டமாகிய பெருமை அவருக்குத்தான் உரியதென்பதை ஒருபோதும் நாம் மறுக்கமுடியாது. வாக்குறுதியைக் கொடுத்தார்; அதை நிறைவேற்றி வைத்தார். அதனால் இன்னும் கூடிய நம்பிக்கை எங்களுக்குண்டாகியது. நாம் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின்னர் தனது நண்பர் செனெற்றர் ஹமீம் அவர்கள் பல முறைகளில் இச்சபையில் பேசிய பொழுது, கனவான் என்று சொல்லுகின்ற பெருமகனைப் பற்றி இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். ஆம் நம்பினோம். நேர்மையானவர், கண்வியமானவர்; அவர் நடந்துகொண்ட மாதிரி கண்ணியமான விதம்; தான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்துக்காக ஒரு பௌத்த பிக்குவைக் கூடச் சுடவேண்டி வந்ததும் அதனை நிலைநாட்டியவர் என்ற கரரணத்துக்காக நாம் அவருக்குரிய பெருமையைக் கொடுத்தோம். அன்றும் எங்கள் நம்பிக்கை கூடிற்று. இவர் கனவான் இந்தச் சந்தர்ப்பத்திலும் இவர் இந்தச் சட்டத்தை ஆக்கி வைத்தார். ஆதலால், சொன்ன மாதிரி அனைத்தையும் காப்பாற்றுவார் என்று நம்பினோம். ஆனால், காலம் போகப் போக அவருடைய மனம் மாறவிட்டதென்பதை நாம் காணக்கூடியதாக இருந்தது. அதனை நாம் காணக்கூடியதாக இருந்தது. அதனை நாம் சொல்லிவைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

(தொடரும்)

...நாட்டுக்கு வந்த இடத்தில் கோயில் கட்டி, பக்தி சிரத்தையுடன் வழிபாடுகளையும் திருவிழாவையும்நடத்தி வருவது மிகவும் பாராட்டத்தக்கதென்றும், தலைநகரான கொழும்பிலே ஆடிவேல் விழா நடப்பதும் சமய பேதமின்றி பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்து வழிபடுவதும், ஈழத்து இந்து சமூகத்துக்கே பெருமையளிப்பதாகுமென்றும், ஒரு யாழ்ப்பாண அன்பர் கூறி, நகரத்தாரின் சமயப்பணியைப் பாராட்டினார்

0 0 0

கொழும்பிலும் இப்போது ஆடிவேல் விழா ஆரம்பமாகிவிட்டது செட்டியார் தெருவிலே அலங்கார ரதத்தில் முருகன் வள்ளி தெய்வானை



யாழ்ப்பாணம், ஞாயிறு

செல்வி ஞானகுமாரி தங்கராசாவின் இசை அரங்கேற்றம் நாளை உடுவில் கிராம சபைத் திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. செல்வி ஞானகுமாரி தமது ஆரம்பகால சங்கீதக் கல்வியை திரு. வி. உருத்திராபதியிடம் பெற்றார் பின்னர் இசைப்புலவர் சண்முகரத்தினம், ஸ்ரீ ஐயாக்கண்ணு தேசிகர் ஆகியோரிடமும், இராமநாதன் இசைக்கழகத்தில் திரு. எம். ஏ கல்யாண கிருஷ்ணபாகவதரிடமும் இசைபயின்றார்.

இராமநாதன் இசைக்கழகத்தில் இவர் பயின்றகாலத்தில் அங்கு முதன் முதலில் நடைபெற்ற சங்கீதரத்தினம் பரீட்சையில் எண்மரில ஒருவராக செல்வி ஞானகுமாரி சித்தியடைந்தார். பரீட்சகர்களான பேராசிரியர் சாம்பமூர்த்தியும் சந்தியாவந்தனம் ஸ்ரீநிவாசராவும் இவர்களைப் பாராட்டினர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளையும் செல்வி ஞானகுமாரியின் இசை ஞானத்தை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார். சங்கீதத்துறையில் இவரைப் போல அதிவேகமுடையவரைத் தாம் கண்டதில்லையென்றும் சங்கீத உலகில் இவர் எதிர்காலத்தில் நன்கு பிரகாசிப்பாரென்றும் அவர் புகழ்ந்துள்ளார்.

## தலா 10 ஆயிரம் ரூபா பிணை

திருகோணமலை, சனி

திருகோணமலை ஸ்ரீ சண்முகவித்தியாலய மாணவியான 16-வயது யுவதியைக் கடத்திச் செல்ல எத்தனித்ததாகக்குற்றஞ்சாட்டப்பட்ட இருவரைத் திருமலை மாவட்ட மஜிஸ்ரேட் தலா 10,000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org